# அருள் ஒளி







நவராத்திரி
சிறப்பு மலர்

புரட்டாதி
இதழ்

71
மலர்

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை
2009


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை சைவப்பெரியார்

# ஸ்ரீமான் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி

உபாத்தியாயரின்

100ஆவது பிறந்ததினம்



## எமது இனிய வாழ்த்துக்கள்


நிர்வாகசபை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்
2009 விரோதி வருடம் புரட்டாதி

மலர் 71

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74/NEWS/2006Y


## நவராத்திரி காலம் இன்றைய தலைமுறைக்கு பலன் தரும் காலம்

எங்கள் திருநாட்டில் ஏக்கமும் மனத்தாக்கமும் என்று ஓயும்? அப்பாவி மக்களின் துயர் எல்லையில்லாதது. முன்னே பல வினைகள் செய்து பிறந்தோமா என்று............ இப்பிறவிப் பயனை இம்மண்ணில் அனுபவிப்பவர்கள் ஏங்குவர். என் செய்வது யாரோடு நோவோம்? யார்க்கு எடுத்துரைப்போம்? போர் மேகம் ஒடுங்கிப்போன பின்னும் 'எத்தனை எத்தனை ஏக்கம். மக்களை வாட்டுகிறது. திருக்கோவில் திருவிழாக்களில் மீண்டும் மக்கள் கூட்டம். தெய்வம்தான் நமக்குத் துணை என எண்ணி வழிபாடு செய்யும் திருக்கூட்டம் பெருகி வருகிறது. திருக்கோவில் வழிபாட்டில் தம்மை மறந்து தாய்க்குலம் வழிபாடு செய்யும் வேளை இரக்கமே இல்லாமல் தாலிக்கொடி அறுக்கும் இரக்கமற்றவர்களின் செய்கையும் அதிகரிக்கிறது. பெற்ற தாயாக, உற்ற சகோதரியாகக் கருதவேண்டிய பெண் குலத்தை ஏங்கி அழவைக்கும் மனிதர்கள் இன்று எம்மண்ணில் .................. தெருக்களில் போகும் பெண்களை தள்ளி வீழ்த்தி மோட்டார் சைக்கிள் தலைக் கவசத்தால் அடித்து விட்டு சங்கிலி பறிக்கும் சம்பவங்கள் பல தொடர்கிறது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் எத்தனை அல்லல்களில் அகப்பட்டு வாழும் அப்பாவிகளை துன்பப் படுத்தும் இரக்க மற்ற சமூகத்தின் கொடுமைகளை யாரிடம் முறையிடுவது. எங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாற்பட்ட சக்தியாக விளங்கும் இறைவனை மன்றாடுவதைவிட யாம் ஏதும் அறியோம். நவராத்திரிவிழா ஆரம்பமாகி நடைபெறுகிறது. இவ்விழா மாணவர்களை சமயப் பண்பாட்டில் ஆர்வம் கொள்ளத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய வேண்டியது கல்விச் சாலைகளின் கடமையாகும். பாடசாலைகளில் சமய நிகழ்வைக் குறைத்து அதன் முக்கியத்துவத்துக்கு மதிப்புக் கொடுக்காது விடுபவர்கள் பலர் இருக்கின்றார்கள்.

பல பாடசாலைகளில் இன்று நாயன்மார்களது குருபூசைகூட கொண்டாடப் படுவதில்லை. இவற்றை விடுத்ததால் நாம் பெற்ற பேறென்ன? விரக்தியான சமூகம் எம் மண்ணில் உருவாவது நன்மை பயக்குமா? எமது கலை கலாச்சாரப் பண்பாட்டு நிகழ்வுகள் பாடசாலைகளில் அருகி வருகிறது. இதிகாச, புராண நாடகங்களை மாணவர் அரங்கேற்ற நாம் வாய்ப்புக்கள் வழங்கவேண்டும். பாடசாலைகள் தோறும் சமய விழாக்களும், கலை விழாக்களும் தவறாது நடைபெற அனைவரும் உழைக்க வேண்டும். அறச்சிந்தனைகளை வளர்க்கும் நாடகங்கள் பாடசாலை தோறும் அரங்கேற்றப்பட வேண்டும். விளையாட்டுத்துறையோடு மாணவர்கள் கலை பண்பாட்டுப் பாரம்பரியங்களிலும் அக்கறை காட்ட வழியேற்படவேண்டும். நவராத்திரி காலம் இளைய தலைமுறை தம்மை கல்வியிலும், எமது மூதாதையர் விட்டுச் சென்ற கலாச்சார விழுமியங்களை, இறை சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள ஆர்வம் கொள்ளும் காலமாக மாற வேண்டும்.

- ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி!

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சக்தி வழிபாடு மிகத் தொன்மையானது. சக்தியை நாயகியாகக் கொண்டு நடைபெறுவது நவராத்திரி விழா. துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்னும் முப்பெருந் தேவியர்களை நோக்கிப் பூசை, வழிபாடு, விரதம் அனுட்டித்தல், விழா வெடுத்தல் என்பன நவராத்திரி காலங்களில் நிகழ்த்தப்படுகின்றன. சகல உலகங்களையும் படைத்து அவற்றையெல்லாம் இயக்கிக் காத்து வருகின்ற மாபெருஞ் சக்தியை மகாசக்தி என்றும் ஆதிபராசக்தி என்றும் நம் முன்னோர்கள் கொண்டு அச்சக்தியை பயபக்தியோடு வழிபட்டு வரலாயினர். இது இந்துப் பண்பாடாக வளர்ந்து இன்றும் இந்து மக்களால் கைக்கொள்ளப் பட்டு வருகின்றது. சக்தி தத்துவத்தைச் சாக்தம் என்று அழைக்கின்றனர். சாக்தம் அறுவகைச் சமயங்களுள் ஒன்றாகவும் வகுக்கப்பட்டுள்ளது. சைவம், வைஷ்ணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்பன ஏனையவை. இந்து சமயம் கொண்டுள்ள ஆறு உட்பிரிவுகளாகவே அவற்றை ஆதிசங்கரர் குறிப்பிடுகின்றார். சாக்தம் ஒரு காலத்தில் பாரத தேசம் முழுவதிலும் தனித்துத் தனிநெறியாக விளங்கியது. அதன் சுவடுகள் சிற்சில பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றன. ஆயினும் பின்னர், மற்றைய நெறிகளுடன் கலந்து, சமய வேறுபாடின்றி சக்தியையும் வழிபாடு செய்தல் முறை ஏற்பட்டு விட்டது. சிவனின் தேவியாகவும்; விஷ்ணுவின் சகோதரியாகவும்; விநாயகன், முருகன் ஆகியோரின் தாயாகவும் பராசக்தி விளங்கும்போது வைதீக சமயங்களுக் கிடையே பேதம் இருக்க வேண்டிய அவசியம் இல்லாமற் போய்விட்டது. தற்காலத்தில் புறச்சமயிகளும் கலந்து கொள்ளுமளவிற்கு நவராத்திரி விழா தேசிய விழாவாகி வருகிறது. கோயில்கள், வீடுகள், பொதுமன்றங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வேலைத் தலங்கள், கலாநிலையங்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் இன, மத, மொழி வேறுபாடின்றி நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நாட்டின் பல்லின, பல மொழி, பல் சமய மக்களிடையே ஐக்கியத்தையும், தேசிய ஒருமைப்பாட்டினையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தக்கூடிய சிறந்த ஊடகமாக நம் நாட்டில் நவராத்திரி விழா அமைவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சக்தி என்றாலே ஆற்றல், வல்லமை, வலு, உந்துவிசை என்றுதான் பொருள் கொள்கின்றோம். இந்த வகையில் நோக்கும் போது சக்தியின்றேல் எவருக்குமே வாழ்வில்லை, இயக்கமில்லை என்ற நிலை வந்து விடுகிறது. சக்தியை வேண்டி நிற்பவர்கள் இவர்கள்; சக்தியை வேண்டி நில்லாதவர் மற்றையோர் என்று குறிப்பிடுவதற்கில்லை. எல்லோருக்கும் சக்தி வேண்டியதே என்பதே உண்மை நிலை. இந்து மக்கள் எல்லா வகைத் தோற்றத்திற்கும், இயக்கத்திற்கும், அவற்றின் வாழ்விற்கும் ஆதாரமாகவும், அடிப்படையாகவும் அமைந்துள்ள மகா சக்திக்கு தெய்வ வடிவம் கொடுத்து மிக உயர்ந்த நிலையினை வழங்கி, விழாவெடுத்து வழிபாடு செய்வதில் மனத்திருப்தி பெற்று வருகின்றனர். நவராத்திரி விழாவும் மகாசக்தியை பல்வேறு தெய்வ வடிவங்களில் கண்டு களித்து வணங்கி வழிபட்டு அழகு அலங்காரங்கள் செய்து, பக்தி செலுத்தி, கலைகளைச் சமர்ப்பித்து ஆராதிப்பதாகவே அமைகின்றது. இத் தெய்வீக விழாக்களையும் சடங்கு சம்பிரதாயங்களையும் பக்தியும், அழகும் சொட்டும் வண்ணம், பெருஞ் செலவு செய்து உலகியல் கண்ணோட்டத்தில் செய்து பார்ப்பதில் எத்துணை ஆனந்தமும் மன நிறைவும் அடைகின்றார்கள் என்பது அதில் ஈடுபாடு கொண்டு திளைத்தவர் களுக்குத்தான் புரியும். அகிலாண்ட நாயகியாகிய அம்பிகை விருப்பு வெறுப்பு அற்றவள்; அளவிட முடியாதவள்; ஆத்மாவாக இருப்பவள்; முதற்காரணமான சக்தி; சகல பிருமாண்டங்களையும் ஈன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்; கருணைக்கடல் ; ஞான உறவினள், பிரும்மானந்த வடிவினள், அத்தகைய சிறப்புக்களை உடைய அன்னையை, மூவுலகங் காப்பவளை, அபிராம வல்லியை, அண்டமெலாம் பூத்தாளை, பரம ஈஸ்வரியை, புவனஈஸ்வரியை தாங்கள் பணிந்து வழிபடுவதும், விழாக்கள் எடுப்பதும் நமது மகிழ்ச்சிக்காகவும், உய்விற்காகவுமே ஆகும்.

உலக மாதாவாகிய அம்பிகையின் கண்களின் அசைவில்தான் காலங்கள் தோன்றி இயங்குகின்றன என்கிறார் ஆதி சங்கரர். ஈரேழு புவனங்களையும், எண்ணற்ற உயிரினங்களையும், நான்கு மறைகளையும், சகல கலைகளையும் தன்னுள் அடக்கி வைத்திருப்பவன் சிவன். அத்தகைய அரன், தேவி பாகத்தினுள் அடக்கம் அப்படியாயின் அம்பிகையின் அருமை பெருமைகளை வார்த்தைகளில் வடிக்கவும் முடியுமா?

மனிதர்களுக்கு இயல்பாகவே ஒரு வேட்கை இருந்து வருகிறது. அது என்னவெனில் சகல வல்லமைகளும் பொருந்திய கடவுளர்களை, உலகியல் கண்ணோட்டத்தில் வைத்து அவர்களுக்குப் பிறந்த தினம், பூப்புநீராட்டல், திருமணம் மற்றும் பல்வேறு சடங்குகள், விழாக்கள் ஆகியவற்றை மனிதர்களுக்குச் செய்யுமாப் போல, நிகழ்த்திப் பார்க்கவேண்டும் என்பதே ஆகும். மேலும் உலகியல் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் பொறுப்பா கவும்; அதிபதிகளாகவும் தெய்வங்களை நியமிக்கும் பாங்கும் மக்களிடையே இருந்து வந்துள்ளது. இந்த வகையிலேயே வீரத்திற்குத் துர்க்கையையும், செல்வத்திற்கு இலக்குமியையும், கல்விக்கு சரஸ்வதியையும் பொறுப்பாளர்களாகவும், அதிபதிகளாக வும் கொள்கின்றனர். இம் மூவரும் ஆதிபராசக்தியின் அம்சங்களாகவே போற்றப்படுகின்றனர். நவராத்திரி விழாவின்போது, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கு முறையே முதல் மூன்று நாட்களும், நடுமூன்று நாட்களும், இறுதி மூன்று நாட்களும் விழா எடுக்கின்றனர். பக்தியுடன், அழகு அலங்காரங்கள், கொலு வைத்தல், கலை நிகழ்ச்சிகள், சுவையான உணவுகள் என்பன முக்கிய இடம்பெறுகின்றன. இவற்றிற் காகப் பணம், பொருள், காலம் சக்தி என்பன செலவு செய்யப்படுகின்றன. இவற்றை வீண் செயல்கள் என்றோ, கேளிக்கைகள், களியாட்டங்கள் என்றோ கூறுவதற்கில்லை. விளங்கிக் கொள்ள முடியாத இறைவனின் தத்துவங்களுக்கு, மனிதர்கள் தம்மால் இயன்றவரைக்கும் அவற்றை உருவகப்படுத்தி தமது அறிவிற்கெட்டியவகையில், உலகியல் பார்வையில் விளக்கங்களைக் காண முயலும் கருமங்களாகவே அவை உள்ளன. மேலும் இவற்றிற்குரிய பிரதிபலன்களை இவற்றை நடத்துபவர்கள் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அம்பிகை யின் கடைக்கண் பார்வை மட்டும் கிடைத்துவிட்டாலே சகல ஐசுவர்யங்களும் பெறப்பட்டுவிடும் எனும் அசையாத நம்பிக்கையும் மக்களிடம் நன்கு வேரூன்றியுள்ளது. மக்கள் ஒருவித இனம் புரியாத சுகத்தையும், மன நிறைவையும் அடைகிறார்கள் என்பதில் ஐயமில்லை. சிற்றின்ப சுகமாக இருப்பினும் மனிதன் ஈற்றில் அடையவிரும்பும் பேரின்ப சுகத்திற்கு அவை வழி வகுக்கின்றன. எனவே நவராத்திரி விழாக்கள் மக்கள் மனங்களை பண்படுத்தி, வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர்கொள்ளச் செய் வதற்கும் "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே" என்ற நிலைக்கு அவர்களை இட்டுச் செல்வதற்கும்; மண்ணில் தெய்வங்களின் அருள் பெற்று நல்ல வண்ணம் வாழ முடியும் என்ற நம்பிக்கை ஒளியை மக்கள் பெற்றுக் கொள்ளச் செய்வதற்கும் பெரிதும் உதவுகின்றன. இந்த முறையில் இந்துப் பண்பாடு, இந்து கலாசாரம் என்பன பன்னெடுங்காலமாக வளர்ச்சி பெற்றும் மக்களை வாழ்வித்தும் வந்துள்ளமை நோக்கற்பாலது. எமது காலத்திலும், இத்தகைய இந்துப் பண்பாடு போற்றி வளர்க்கப்படவேண்டியதும், பேணப்பட்டு அடுத்த சந்ததியினருக்கு வழங்கப்பட வேண்டியதும் நமது கடமையாகும். பாடசாலைகளில் நவராத்திரி விழாவினை கொண்டாடுவதன் மூலம் இக்குறிக் கோளை நன்கு அடையமுடியும். இந்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு, இந்துசமய விழுமியங்கள் ஆகியவற்றை இளவயதிலிருந்தே மாணவர்களிடம் வளர்க்கும் பொறுப்பினை பாடசாலைகள் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். இன்றைய அவசர உலகில் குடும்பமோ, ஏனைய சமூக நிறுவனங்களோ இப்பொறுப்பினை ஏற்கக் கூடிய நிலையில் இருப்பதாகப் பெரும்பாலும் தோன்றவில்லை.

ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையை அடுத்து முதலாவது நாள் பிரதமை தொடக்கம் நவமி ஈறாக உள்ள ஒன்பது நாட்கள் நவராத்திரி காலமாகும். பத்தாம் நாள் தசமித் திதி. விஜயதசமி எனப்படும் விரதம் அனுட்டிப்பவர்கள் நவராத்திரி தொடங்குவதற்கு முதல் நாள் அமாவாசையன்று ஒரு நேரம் மட்டும் உணவுண்டு தொடங்கிய நாளிலிருந்து எட்டு நாட்கள் பழம் அல்லது இளநீர் அல்லது பால் இரவில் அருந்தி மகா நவமியன்று முழுநாளும் உபவாசம் இருந்து பத்தாம் நாள் விஜயதசமியன்று உணவு உட்கொண்டு பாரணம் செய்வர். இவ்வாறு மேற்கொள்ள இயலாதவர்கள் ஒவ்வொருநாளும் ஒரு நேர உணவுண்டு நவமியில் உபவாசம் இருந்து மறுநாள் தசமியில் உணவுட் கொண்டு விரதத்தை நிறைவு செய்வர். குறிப்பாகக் கல்வி கற்கின்ற மாணவர்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பதால் நல்ல பயனை அடைவர். விரத நாட்களில் அகத் தூய்மை, புறத் தூய்மையுடையவராய் கடவுள் சிந்தையுடன் வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும். தூய எண்ணங்கள், பண்பான பேச்சு, நற்செய்கைகள் மூலம் தம்மை ஒரு சிறந்த மானுடன் ஆக்கிக் கொள்வது விரதத்தின் நோக்கம்.

வீடுகளிலும் நவராத்திரி விழாக் கொண்டாடப்படுகிறது. ஒன்பது கன்னிப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு நாளுக்கு ஒருவராக அவர்களை நீராட்டி, புத்தாடை புனைந்து, மாலை அணிந்து; வாசனைப் பொருட்கள், மற்றும் கண்ணாடி, குங்குமம், மஞ்சள், சந்தனம் முதலிய மங்கலப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கி வழிபாடு செய்யும் வழக்கமுமுண்டு. இவர்கள் இரண்டுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட வயதினராக இருப்பர்.

இன்னொரு முக்கியமான அம்சம் நவராத்திரிக் கொலு வைத்தல் ஆகும். இது ஓர் அழகு அம்சம். நவராத்திரி விழாவில் அழகு ஆராதிக்கப்படுகிறது. எல்லாமே ஒழுங்காக இருக்கும்போது அங்கு அழகு மிளிர்கிறது. "பேரழகும் பெரெழிலுமாக காட்சி தருகின்ற அம்பிகையை கொலு பீடத்தின் நடுவில் வைத்து சூழவும் அழகுப் பொம்மைகளையும், தெய்வச் சிலைகளையும் மற்றும் பொருட்களையும் ஒழுங்காக அடுக்கி வைத்து அழகு செய்து வழிபாடு செய்வர். மாலை வேளையில் அண்டை அயலவர்களையும் அழைத்து அவல், கடலை, பலகாரங்கள், சுவை உணவுகள், பழங்கள் ஆகியவற்றை அம்பாளுக்கு நிவேதித்து ஆடல், பாடல் நிகழ்த்தி வழிபடுவர்.

கிருஷ்ணன் நவராத்திரியின் முதல் நாள், கைடபன், மது என்னும் இரு அசுரர்களைக் கொன்றான். அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டி வைத்தமையைக் குறிப்பதாக நவராத்திரி நோன்பும், அதன் நினைவாகக் கொலுவில் பொம்மைகளை வைத்து அழகு செய்வதும் நடைபெறுவதாகக் கூறுவர்.

நவராத்திரி என்னும் தேவி பூசை என்றும், வாணி விழா என்றும், ஆயுத பூசை என்றும், மகாநவமி நோன்பு என்றும் பற்பல பெயர் கொண்டு அழைக்கப் படுகிறது. நவராத்திரி இறுதிநாளன்று புத்தகங்கள், பென்சில், பேனாக்கள், வீணை முதலிய இசைக் கருவிகள் மற்றும் கலையோடு தொடர்பான பொருட்கள் யாவற்றையும் பூசையில் வைத்து சரஸ்வதியை வழிபடுவர். அடுத்தநாள் தசமியன்று காலையில் இவற்றை எடுத்துப்படித்தும், எழுதியும், இசைக் கருவிகளை மீட்டியும் நாள் வேலையைத் தொடங்கும் வழக்கமும் இருந்து வருகிறது. விஜயதசமியன்று பிள்ளைகளுக்கு ஏடு எழுதுதல் அல்லது வித்தியாரம்பம் செய்து வைக்கப் படுகிறது. இதை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்காகவே அன்று நிறைவேற்றுவர் நவராத்திரி காலங்களில் அம்பாளை கும்பத்தில் பூஜிப்பர். பத்தாம் நாள் தசமியிலன்று கும்பத்தை எடுத்து அதனுள் உள்ள நீரை ஓர் புனித இடத்தில் சேர்ப்பர். இதனைக் கும்பச் சரிவு என்பர். நவதானியங்கள் விதைக்கப்பட்டு அதன் மேலேயே கும்பத்தை வைப்பது வழக்கம். நவதானியங்கள் பத்தாம் நாட் காலையில் நன்கு முளை விட்ட நிலையிலிருக்கும். இம்முளைகள் சூடுவதற்காக வழிபடுபவர் களுக்கு வழங்கப்படும்.

பத்தாம் நாள் மகா நோன்பு முடிவடைகின்றது. இதனை மானம்பூ என்று திரித்துக்கூறுவர். கோயில்களில் வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அம்பாள் எழுந்தருளி வீதி வலம் வந்து வாழை மரம் வெட்டும் வழக்கம் இருந்து வருகிறது. விஜய தசமியில் அம்பு போடுதல் என்று இதனைக் கூறுகின்றனர். மடமையின் உருவான மகிஷாசுரனை அம்பாள் அழித்த வெற்றித் திருநாளாக விஜயதசமி கொண்டாடப் படுகிறது. அறியாமையை அகற்றிய இந்த நன்நாளில் அறிவை நாடிச் செல்லும் முதல் நிலையாக வித்தியாரம்பம் செய்தல் எத்துனை பொருத்தமான செயல் என்பதும் உணர்த்தப் பாலது.

அன்னையின் துர்க்கை வடிவம் எம்மிடமுள்ள அசுரக் குணங்களையும், விலங்கு மனத்தினையும், அரக்கத் தன்மைகளையும் அகற்றி எம்மைச் சாத்வீகம் நிறைந்த மனிதர்களாக்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்விக்கிறது. துர்க்கை தரும் வீரம், பாவங்களை விலக்குவதற்கு எமக்கு வேண்டிய துணிவினை தருகிறது. மகாலட்சுமி வடிவம் மனித வாழ்வில் ஒழிக்கப்பட வேண்டிய வறுமையை அழிப்பதற்கு செல்வத்தை நமக்கு வழங்கி எம்மை வாழ்விக்கிறது. ஈதல் அறம் என்பதை உணர்ந்து செல்வத்தைப் பெற்று பிறரின் வறுமையையும் போக்கும்போதுதான் அன்னை மகாலட்சுமி மனம் மகிழ்கிறாள். சரஸ்வதி வடிவம், மனித வாழ்வில் இடம் பெறக்கூடாத அறியாமையை அகற்றி அறிவொளி ஏற்றி மக்களை வாழ்வாங்கு வாழ வழிவகுக்கிறது.

வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் மனித வாழ்க்கைக்கு முக்கியமானவை. வாழ்க்கையில் இம்மூன்றையும் அடைவது அதன் குறிக்கோள். இம்மூன்றினதும் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மனிதனில் நிகழும்போதுதான் அவன் பூரணத்துவம் பெற்று முழு மனிதனாக, நிறை மனிதனாக, இன்னும் சொல்லப்போனால் ஆளுமை நிறைந்த மனிதனாக ஆக்கம் பெறு கின்றான். வீரம், செல்வம் கல்வி ஆகியவற்றின் முழுமையான வளர்ச்சி மாத்திரம் ஒருவனை செம்மையான நிறைமனிதனாக்கிவிட மாட்டாவென்பது இந்துசமயக் கொள்கை. வீரத்தின் பெரு வளர்ச்சியும், செல்வத்தின் பெரு விருத்தியும், கல்வியின் மிகைப் பெருக்கமும் விலங்கு இயல்பு கொண்ட மனிதன் ஒருவனில் ஏற்படுமாக இருந்தால் விளைவு நன்மையாக இருக்க மாட்டாது. மாறாக மனித குல நாசத்திற்கே வழிவகுப்பதாக அமையும். எனவேதான் இந்து சமயம் தெய்வங்களோ வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் பொருத்திக் காட்டுகிறது. வீரம், செல்வம், கல்வி ஆகிவற்றின் வளர்ச்சியும், பெருக்கமும் தெய்வத் திருவருளினால் கிடைக்கப் பெற்றமையை மனிதர்கள் உணர்வதாலும், அதற்காகத் தெய்வங்களுக்கு நன்றி தெரிவிப்பதாலும் ஏற்படுகின்ற நன்மை யாதெனில் வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் பிரயோகிக்கும்போதும், பயன்படுத்தும்போதும் இறை சிந்தனையுடன் அவர்கள் செய்வதேயாகும். இறைவனை நினைத்து ஆற்றப்படும் கருமங்கள் நிச்சயம் கைகூடுவதோடு, நல்ல விளைவுகளையும் தருகின்றன. எனவேதான் வீரம், செல்வம், கல்வி என்பவற்றின் வளர்ச்சி இறை சிந்தனையின் அடிப்படையில் திருவருட்பேறாக தூய் மையின் வடிவமாக மனிதர்களில் ஏற்பட வேண்டுமென்று இந்து சமயம் வலி யுறுத்துகிறது. இந்த வகையில் எழுந்தது தான் நவராத்திரி வழிபாடும், விரதமும், விழாவுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# நவராத்திரி மகத்துவம்

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

உண்மையென் றுணர்ந்த நெஞ்சில் ஓடி வந்து நிற்பவள்
நன்மை செய்பவர்களுக்கு ஞான தீபம் ஆனவள்
மென்மையான பண்பினோடு மேவும் அன்புக் காவியம்
பன்மை ஒன்றும் பாங்கில் வந்த பாரின் அன்னை வாழ்கவே

அன்னையை வாழ்த்த அகில உலகமும் வாழும் அவளை ஏன் வாழ்த்துகிறோம். நாம் வாழ வேண்டும் என்பதற்காகவே வாழ்த்துகிறோம். அத்தகைய வாழ்த்துக்கும் வழிபாட்டிற்கு முரிய நாட்கள் இந்த நாட்கள். ஒன்பது இரவுகள் நமக்குத் தலைப்பொழுதாகும். இரவையே பகலாகக் காணும் சிறப்பு பக்தர்களுக்கு உண்டு. திருவருளிடத்திலே எம்மை ஒப்புக் கொடுத்துத் தூங்காமல் தூங்கி நிற்கும் இரவுகள் நவராத்திரி நாட்கள். தேவி உபாசனை, பக்தனை மகானாக்குகின்றது. தரித்திரனைச் செல்வந்தனாக்குகிறது. அமங்கலத்தை மங்கலம் ஆக்குகிறது. மூடனை முழு ஞானியாக்குகிறது. ஆம்! தேவி பராசக்தியே இவ்வாறு மொழிகிறாள். "காண்பது, கேட்பது, மூச்செறிவது உண்மையில் யாவும் என்னுடைய ஆற்றலால் நிகழ்கின்றன. இந்தப் பிரபஞ்சம் தோன்றும்போது நான் காற்றாகி எப்பொருளிலும் ஊடுருவி நிற்கிறேன்" என்பது தேவி சூக்தம்.

எமது சமயத்தை நோக்குமிடத்து விழாவின் தத்துவங்கள் யாவும் நன்மை, தீமைகளுக்கிடை நடைபெற்ற போராட்டமாகவே விளக்கம் தருகிறது. எப்போதும் எந்த இடத்திலும் இந்தப் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இதனையே தேவாசுர யுத்தமாகப் புராணங்கள் வர்ணிக்கின்றன. இவ்வாறு ஒரு காலத்தில் நடைபெற்ற தேவாசுர யுத்தத்தில் தேவர்கள் வெற்றி கண்டனர். அதனால் இறுமாப்பு கொண்டனர். இந்த இறுமாப்பை அடக்கியவள் அம்பிகை.

மகிடாசுரன் என்பவன் எருமை வடிவம் கொண்டவன். அஞ்ஞான வடிவமே எருமை. இவ்வடிவம் கொண்ட அசுரன் விரும்பியபோது தேவ, மானுட, மிருக வடிவங்களைப் பெறும் சக்தி பெற்றிருந்தான். அவனுக்கு ஒரு பெரிய அசுரப் பட்டாளம் கிடைத்தது. இப்பலம் கொண்டு தேவர்களை எதிர்த்தான். கடும்போர் புரிந்தும் வெற்றி கொள்ள முடியவில்லை. மரணபயமில்லாமல் உடனே போர் புரிய விரும்பினான். பிரம்மனிடம் சென்றான். மகிடன் தவம் புரிந்து நின்றான். ஆனால் பிரம்மனால் மரணமில்லா வரம் கொடுக்க முடியவில்லை. வேறு நிபந்தனை கேட்டான். உடனே பெண்ணால் அன்றி வேறெவராலும் மரணம் நேரக்கூடாது என்றான் மகிடன். அதே வரம் கிடைத்தது.

மகிடன் தேவர்களைக் கலக்கினான். துன்பத்தைத் தாங்கமுடியாத இந்திரன் வியாழபகவானிடம் சென்றான். அவர் எல்லாம் உணர்ந்தவர். இது பராசக்தியின் லீலை என்பதைப் புரிந்து கொண்டார். பரதேவதையாகிய சக்தியை மறந்ததால் அசுர சக்திகள் இவர்களுக்குமேல் ஆதிக்கம் செலுத்துவதை உணர்ந்தார். இப்படி அடிபட்டு நின்றால்தான் அம்மாவின் நினைவு இவர்களுக்கு வரும் என்பது தேவகுருவின் நினைவு.

உடனே இந்திரனைப் பார்த்து சொன்னார். "இந்திரா! இப்போதுதான் உனக்கு தெய்வ நினைவு வரத் தொடங்கியிருக்கிறது. பகைவனின் எழுச்சியில் பகவானின் நினைவு தோன்றும். அகங்காரம் போனால் அன்றி ஆனந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படாது. யுத்தத்தையே தொடர்ந்து செய்து உன்னுடைய கர்ம வினையைக் கலைத்து விடு. மகிஷனிடம் சரணாகதி அடையாதே. தெய்வ சகாயத்தை நாடினால் எல்லாம் வெற்றி கிட்டும்" என்று கூறிய வியாழபகவான் இந்திரனையும் அழைத்துக் கொண்டு பிரம்மனிடம் சென்றார். ஆனால் நாராயணன் போரிலே ஊக்கத்தைக் கொடுத்து இந்திரனுக்கு உற்சாகம் ஊட்டினார். இந்நிலையில் மகிடனிடம் இந்திர தேவர்கள் போர் புரிய முன்வந்தனர். ஆனால் மாயப் போரினால் தேவர்களுடைய பார்வைக்கு எந்தப் பக்கமும் மகிடாசுரன் காட்சி கொடுத்தான். இந்நிலையில் ஸ்ரீமத் நாராயணன் சக்கரத்தைச் சுழற்ற மகிடனின் மாய ரூபம் மறைந்தது. ஆனால் அவன் சிம்ம வடிவம் எடுத்துக் கொண்டான் உடனே நாராயணன் அவ்விடத்தைவிட்டு நீங்க மகிடன் பழைய வடிவத்தை எடுத்தான். இந்திரன் கலங்கித் தன்னுடைய யானையாகிய ஐராவதமும் திகைத்து நிற்க அங்கிருந்து மறைந்து ஓடிவிட்டான். தேவலோகம் அசுர லோகமாகி விட்டது. இந்திரன் அரியாசனத்தில் மகிடாசுரன் அமர்ந்தான். பராசக்தியாகிய பர தேவதை தர்மக் கோல் வழுவாமல் இக்காட்சியை நடத்திக் கொண்டிருந்தாள். மீண்டும் தேவர்கள் பிரம்மனிடம் தஞ்சம் புகுந்து மகுடனுக்குக் கொடுத்த வரம் மிகத் தப்பானது என்பதை உணர வைத்தார்கள். ஆனால் பிரம்மதேவர் மகுடனிடம் முடிவைப் பற்றியும் அது ஒரு பெண்ணால் ஏற்படும் என்றும் கூறிய வுடனே தேவர்கள் கயிலைக்கு சென்று பரமேசுவரனை வணங்கி நின்றார்கள். அப்பொழுது இறைவன் பிரம்மனைக் கண்டித்து மகுடாசுரனுக்கு வரம் கொடுத்தது முற்றிலும் தவறு என்பதை உணர்த்தி விட்டார். அதுவுமின்றி நாராயணனிடமே ஆலோசனை கேட்கும் படி அனுப்பி விட்டார். உடனே நாராயண னைக் கண்டு தமது அவலத்தைத் தேவர்கள் முறையிட்டனர்.

நாராயணனோ அந்த மகாசக்தியின் லீலைகளை நினைத்துப் பார்த்து தேவர்களை நோக்கி அந்தப் பராசக்தியைத் தியானிக்க வேண்டும் என்று வழி காட்டினார். எல்லோரும் தியானத்தில் ஈடுபட்டனர். ஏன் சிவனும் நாராயணனுமே தியானம் செய்து நிற்க ஒரு பேரொளி அவ்விருவரது முகங்களிலிருந்து தோன்றியது. அற்புதமான புயபல பராக்கிரமங் கொண்ட தாய்மையின் உரு கற்பனைக்கும் எட்டாத சௌந்தரியப் பிரகாசத்தை வெளிக்காட்டிக் கொண்டு காட்சியளித்தது. அம்மா வந்து விட்டாள். மகிடன் மடிந்தான் என்று தேவர்கள் ஆனந்தம் அடைந்தனர். பரமேசுவரன் சூலாயுதத்தை அம்பாளுக்கு அளித்தார். நாராயணன் ஒரு சக்கரத்தைக் காணிக்கையாகக் கொடுத்தார். இமவான் சிங்க வாகனத்தைக் கொடுத்தான். சிம்மானேசுவரி என்ற பெயர் இவள் ஒருத்திக்குத்தானே உண்டு. அஞ்ஞான வடிவமான மகிடனை வதைக்க ஞானாம்பிகை தோன்றினாள். மகிடன் அடங்கினான். அவனையே நல்லுணர்வு கொடுத்து வாகனமாகவும் ஏற்றுக் கொண்டாள்.

மகிடாசுரனை வதைத்த அட்டமி, நவமி தினங்களை சாக்தர்கள் நவராத்திரியில் மிகப் புண்ணிய காலமாகக் கருதுகின்றனர். துர்க்கையும் மகாலட்சுமியும் அட்டமி, நவமி கூடும் வேளையில் மகிடவதம் செய்ததால் இவ்விரு திதிகளும் விசேடம் பெற்றன. மகிட வதத்தின்பின் தேவர்கள் உடனேயே அம்பிகையின் ஆக்ஞையை முன்னிட்டுத் தமது ஆயுதங்களை அவள் அடியில் வைத்துப் பூசித்தார்கள். அடுத்த தினமாகிய விஜயதசமி என்பது தேவி தனது அவதார காரியம் முடிந்ததும் உருக்கரந்த தினமாகும். தான் மறைந்ததாக அவர்கள் வருந்தா வண்ணம் தன் நினைவை அவர்களுக்கு வெகு அழுத்தமாகத் தந்து தேவருலகில் அவர்கள் வெற்றி விழாக் கொண்டாடுமாறு இந்த ஜகந்மாதா அருளிய தினம் விஜயதசமி. விஜயம் என்றால் வெற்றி. பொதுவாகப் பெரியோரது வருகையை விஜயம் என்கிறோம். ஆனால் அம்பிகையின் போக்கிலே (திரும்புதல்) இவ்விழா எடுக்கப்படுகிறது. அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரரை மட்டும் வெல்லவில்லை தேவர்களின் இறுமாப்பையும் வென்றாள்.

இவ்வெற்றியின் காரணமாக அவளுக்கு சண்டி, சண்டிகா என்ற நாமங்கள் உண்டு. அதாவது தீவிரமாகத் துளும்பும் மூர்த்தி அவளே. இவளே துர்க்காதேவி. துர்க்கையிலிருந்து எம்மை மீட்பவள் இவளே. எனவே இத்தேவியை அர்க்கியம், அலங்காரம், சுகந்தம், சந்தனம், மலர், அட்சதை, தூபம், தீபம் ஆகியவற்றால் பூசிப்பாயாக என ஞானிகள் வழிகாட்டினர். இவ்வாறு சின்மயமான தேவியுடன் வழிபாட்டினால் தன்மயமாகிவிட வேண்டும். மகிடாசுரனின் பிடரியில் தன்னடிகளை ஊன்றி நிற்கும் எழில்மிகு வடிவத்தையே துர்க்காதேவியின் எழில் விக்கிரகமாகக் காண்கிறோம். மர்த்தனம் என்பது அரைப்பது, அதாவது கெட்டியான தன்மை கரைகிறது. மகிடன் அடங்கினான் என்பதும் இதுவே. நம் திருக்கோயிலில் சங்கு சக்கர தாரிணியாக விஷ்ணுசக்தியாக அம்பாள் விளங்குகிறாள். ஞானபராசக்தி அன்பில் ஆனந்த ரூபிணியாக சிம்மத்தில் இருந்து துதிகளைச் செவிமடுத்து அருள் புரிந்தாள் என்பது நவராத்திரி விழாவின் பயனாகும். நவராத்திரி தினங்களில் இத்துதியை நாம் மேற்கொண்டு விரத அனுட்டான சீலர்களாக வாழ்ந்து எமது அஞ்ஞானத்தை நசித்து மெஞ்ஞானத்தை பெருக்கிக் கொள்வோமாக.

## கலைவாணி தாயேநீ அருள்வாணியே

வாணிக கலைவாணி வாணிதாயே
　வந்தருள ஞானம் தருவாய்நீயே
பேணிநல் வளமோங்கச் செய்யுந்தாயே
　பெருமாட்டி நான்முகியே அருள்வாணியே

கம்பன்கவி காளமேகம் கண்ணதாசன்
　கவிகொள்க வியமுதை நல்கந்தானே
வற்புணர் வம்பிகையே வாணிதாயே
　வந்துகலை ஞானவொளி தருவாயம்மா

உள்ளத்தில் உள்ளவிருள் தன்னைஓட்டி
　ஒளிகாண பெருங்கல்வி 'யமுதைநல்கி
எள்ளளவுந் தெம்மை அகலுந்தாயே
　எழில்வாணி தாயேநீ அருள்வாணியே

சபையேறிக் கவிபாடக் கருணைசெய்வாய்
　சாதனையும் தமிழால் சீர்த்துச்செய்வாய்
சோலையுறு நான்பாடும் கவியாவிலும்
　சொல்லாகிப் பொருளாகி நிற்பாயம்மா

தமிழ்ச்செல்வம் தந்தார்க்கு வறுமையென்றும்
　தாழாத நயகுளன் கொடையோவம்மா
நாவிருக்கும் இடந்தன்று நலமசெய்யும்
　நல்வாணி தாயேநீ அருள்வாயம்மா.

சு. குகதேவன்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாசிவ மூர்த்தம்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

உயிர்கள் ஞானக் கண்ணைப் பெற்று ஆனந்த முறச் சிவபெருமான் ஐந்தொழிலை இயற்றுகின்றார்.

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் என்னும் பிரம மந்திரம் ஐந்தும் இதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம் , அத்திரம் என்னும் அங்க மந்திரம் ஆறும் ஆகப் பதினோரு மந்திரங்களுமே தமது திருமேனியாகச் சதாசிவ மூர்த்தி உயிர்களுக்குச் அனுக்கிரகம் செய்கின்றார். அவர் கங்கை தங்கு சடா பாரமும் திருமுகங்கள் ஐந்தும் திருத்தோள்கள் பத்தும் நூபுரமும் ஒளிமிக்க மேனியும் பேரின்பத்தைத் தரும் இருபதமும் உடையவர். தம்மிடத்தே மகேசுர மூர்த்தியையும் மகேசுவரரிடத்தில் உருத்திர மூர்த்தியையும் உருத்திரரிடத்தில் முகுந்தரையும் முகுந்தரது உந்திக் கமலத்தில் அயனையும் உதிக்கச் செய்து 1அயன் படைக்கவும், மால் புரக்கவும், உருத்திரன் அழிக்கவும், மகேசுரர் மறைக்கவும், சதாசிவராம் தாம் அருள் புரிந்து தொழில்களை நடத்துவார்.

2உயிர்கள் வினைக்கேற்ற வடிவங் கொண்டு பற்பல யோனிகளில் உருவம் தாங்கி இரு வினைகளைப் புரிந்தும், அனுபவித்தும், பிறந்தும், இறந்தும் மூவுலகங்களிலும் சுழலும் சுவர்க்க நரகங்களில் இன்ப துன்பங்களை அடைந்தடைந்து திரியும்.

இங்ஙனம் உயிர்களை 3ஆட்டுவித்துத் திருவிளையாடல் புரிபவர் இறைவர். மால், அயன் முதலான கடவுளர் எல்லாம் அவரது ஆட்சிக்கு உட்பட்டவர்கள். சுதந்திர சத்தி உடையவர் பதியே. அவரே முதல்வர். சதாசிவத்தில் தோன்றிய மகேசுரர் உருவத் திருமேனி கொண்டு உமா மகேசுரராய்த் தம்மை அடைந்தோர்க்கு அருள் புரிபவர்.

இவ்வாறு இறைவன் ஐந்தொழிலை நடாத்தும்போது சிற்சில உயிர்கள் 4இருவினையொப்பு, மலபரிபாகம் பெற்று அருட்சத்தி தோய்ந்து மல நீக்கம் பெறும். மல நீக்கம் பெற்ற உயிர்களை இறைவர் தாமே பொருந்துமாறு அருள் பாலிப்பர். தம்மை 5அவர்க்கு அளிப்பர். அவரைத் தாம் கொள்வர்.

**மகேசுர மூர்த்தி கொண்ட இருபத்தைந்து திரு வடிவங்கள்:**

1. வரோதய மூர்த்தி - தம்மை வழிபடுபவர்களுக்குத் தமது சாரூபத்தை அருளுவர்.
2. சுகாசன மூர்த்தி - உள்ளத்து விகாரத்தை போக்குவர்.
3. கலியாணசுந்தரர் - மங்கலம் நிறைந்த மடந்தையை அருளுவர்.
4. உமாமகேசுவரர் - திருமணம் முதலிய நல்ல இச்சைகளைக் கொடுப்பவர்.
5. கிரீசர் - மனையாளுடன் விருப்புற்று வாழ வரமளிப்பர்.
6. சோமாஸ்கந்தர் - நன்மக்களை ஈந்தருள்வர்.
7. அரிகர மூர்த்தி - சத்திநி பாதம் கூடிட அருள்வர்.
8. சக்ரதானமூர்த்தி - சகல போகங்களையும் தருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. திரிமூர்த்தி - சாரூபம் அருள்பவர்.

10. தட்சிணாமூர்த்தி - சூரிய மண்டலத்தில் சேரச் செய்து பேரின்பம் ஊட்டுவார்.

11. பிச்சாடனமூர்த்தி - பற்றுக்களை நீக்குவர்.

12. கங்காளமூர்த்தி - ஆசைகளை அறுப்பார்.

13. காமசங்காரர் - காம பீடையை நீக்குவார்.

14. காலசங்காரர் - எம பயத்தைக் களைவார்.

15. சலந்தராசுரசங்காரர் - குரோதத்தை நீக்கி யோகத்தைக் கூட்டுவார்.

16. திரிபுராரி - முக்குணங்களை நீக்கும் ஆற்றலைத் தருவார்.

17. சரபமூர்த்தி - மாயா கன்மத்தை நீக்குவார்.

18. நீலகண்டமூர்த்தி - துன்பத்தை நீக்கி இன்பத்தை அருளுவார்.

19. திரிபாதமூர்த்தி - ஞானம் தவிர்ந்த நிலைகளை அடையச் செய்வார்.

20. ஏகபாதர் - ஞானத்தைக் கூட்டுவார்.

21. பைரவமூர்த்தி - பற்றுக்களை நீக்கி இன்புறச் செய்வர்.

22. சந்திரசேகரர் - பிறப்பு இறப்பு இல்லாமற் செய்வர்.

23. இடபாரூடர் - திருவருள்பாலித்து இன்பம் ஊட்டுவார்.

24. நடனமூர்த்தி - ஆனந்த நிலையை ஆக்குவார்.

25. கங்காதரர் - விரும்பியவற்றை அடையச் செய்வார்.

(இவை யாவும் உபதேச காண்டத்தில் இயம்பியவற்றை இங்கு எடுத்துக் காட்டினம்)

இவை அனைத்தும் பன்னிரு திருமுறைகளில் பயின்று வருவனவற்றைப் பரக்கக் காணலாம். இனி இலக்கமிடப்பட்ட ஒரு சில தத்துவார்த்தங்களை மேற்கோளுக்காக இங்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றோம்.

**1. படைப்பு இறைவன் ஆணையால் நிகழ்வது**

படைப்புந்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றன்மிகு வேணுபுர மதுவே.

திருமுறை 1-9-3

**2. உயிர்கள் வினையை அனுபவிக்கப் பிறவியில் அலைதல்.**

மக்களாம் விலங்குமா மாசில் வானிடை
புக்குளாம் பறவையாம் புல்லு மாமதில்
மிக்க தாவரமுமாம் விளங்கல் தானுமாம்
திக்கெலா மிரைபுரி தேவும் யாவுமாம்.

கந்தபுரா காசிபன் உபதேசப் படலம் -9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இறைவன் உயிர்களை இயக்குகிறான்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே.

திருமுறை தனித்தாண்டகம் - 3

4. இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் படிதல்.

மோக வல்வினை யாற்றியே
பவத்திடை மூழ்கும்
பாக ரல்லவர்க் கெய்திடா
தவனருள் பவமும்
போக மாற்றிடு தருமமு
நிகர்வரு புனிதர்க்
காகு மற்றவ னருணிலை
பாகரா மவரே.

கந்தபுராண அடி முடி தேடு படலம் -98

5. இறைவர் தம்மைக் கொடுத்து அவரைக் கொள்வர்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந்துறைபுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யானிதற் கிலன்ஓர்கைம் மாறே.

திருவாசகம் -397

இவ்வாறு நாதன் ஒருவனே நவத்தரு பேதமாக நடித்தருள்வான். அங்ஙனமாக நடிப்பதனால் சிவபெருமான் விகாரியாவதில்லை. முத்தொழிலினுக்கும் சுதந்திரம் சிவபெருமானுக்கே உண்டு. எல்லா வித முதன்மையும் உடையவர் சிவபெருமானே ஆவார். "பதியரன் பாசந் தன்னிற் பட்டுழல் பசுநாம்" என்னும் வாக்கு பிரமதேவர் தக்கனுக்கு உபதேசித்த சிவபரத்தவ செம்பொருள் என்பது சிந்தையில் கொள்ளத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரகுருபரர் பாடிய அம்மை வழிபாடு

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள்.

அம்மை வழிபாடு பொதுமக்களிடையே அம்மன் வழிபாடு எனத் திரிபுபட்டு வழங்குகிறது. ஆங்கில மொழித் தொடரை நேரடியாக மொழி பெயர்ப்போர் 'தாய்த்தெய்வ வழிபாடு' என்ற தொடரை இன்று பயன்படுத்தி வருகின்றனர்.

திராவிடர் ஆதியிலே அம்மை வழிபாட்டுக்காரராக இருந்தனரென்ற கருத்துகோள் அறிஞர் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. மானிடப் பண்பாட்டு வளர்ச்சியிலே, ஒரு காலப்பகுதியிலே, பெண்களே சமூகத்தில் முதன்மை பெற்று விளங்கினரென்றும், அக்காலத்திலே பெண் தெய்வமே சமூகத்திலே முதன்மை பெற்று விளங்கியதென்றும், மானிடவியலாளர் கூறுவர். பெண் முழு முதன்மை பெற்று விளங்கிய தாய் வழி உரிமைச் சமுதாயம் ஒன்று இருந்திருக்கக் கூடுமாயினும், அது வரலாற்றுக் காலத்துக்கு முந்திய காலத்திலேயே இருந்திருக்க வேண்டும். அத்தகைய சமுதாயம் ஒன்றின் எச்ச சொச்சங்களையே வரலாற்றுக் காலத்தில் நாங்கள் காணக் கூடியதாயிருக்கிறது.

சுமார் மூவாயிரத்தைந்நூறு, நாலாயிரத்தைந்நூறு ஆண்டுகள் காலத்துக்கு முன்பு இந்தியாவின் வடமேற்கில் காணப்பட்ட இந்துவெளி நாகரிகம் திராவிடருடையதென்பது இன்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அம்மை வழிபாடு அங்கு இடம் பெற்றதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. சிவலிங்க வழிபாடு முதலிய வேறுபல வழிபாடுகளுடன், அம்மை வழிபாடும் ஆங்கு இடம் பெற்றிருந்திருக்கிறது.

சங்க காலத் தமிழகத்திலே, நிலவாரித் தெய்வங்களை நானிலங்களுக்குக் குறிப்பிடும் தொல்காப்பியம் அம்மை வழிபாடு எதனையும் குறிப்பிடவில்லை. மேற் கணக்கு நூல்களிலே கொற்றவையைப் பற்றிச் சில கூற்றுகள் இடம்பெற்றுள்ளன. வெற்றித் தெய்வமான கொற்றவைக்கு ஐயை, காடு கிழாள் என்னும் பெயர்களும் இருந்தனவென்றும் முருகன் கொற்றவையின் மகனாகக் கருதப்பட்டான் எனவும் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலிய இலக்கியங்களில் இருந்து தெரிய வருகின்றன. தொல்காப்பியத்திலே பாலை நிலத்துக்குத் தெய்வங் கூறப்படாமையாலும், வெற்றி பெற்று வாகைசூடும் வாகைத் திணையே பாலை நிலத்துக்குரிய புறத்திணையாகிய வாகைத் திணை எனப்படுவதாலும் கொற்றவையைப் பாலை நிலத் தெய்வமென அறிஞர் சிலர் கொள்வர்.

ஆரியருடைய தெய்வங்கள், கடவுட் கொள்கைகள், வழிபாட்டு முறைகள், என்பனவற்றோடு இரண்டறக் கலந்து 'இந்து நெறி' உருப்பட்ட போது, கொற்றவை ஆரியருடைய துர்க்கையாக மாறிவிட்டாள். கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலே, விசயாலயசோழன் சோழப்பேரரசுக்கு அத்திவாரமிட்டபோது துர்க்கைக்கு கோயில் எடுத்து, அவளின் உபாசகனாகத் தன்னை ஆக்கிக் கொண்டான். துர்க்கை உமையம்மையின் ஓர் அம்சமாகவும் கணிக்கப்படுவதுண்டாதலால் துர்க்கை சிவனின் சக்தியாகவும் சொல்லப்படுவதுண்டு.

துர்க்கை வழிபாடு தமிழ்ப்பொது மக்களிடையே பெருஞ் செல்வாக்குப் பெறவில்லை. கிராமிய மட்டத்திலே, காளி செல்வாக்குமிக்க தெய்வமாக விளங்குகிறாள். காளி வடநாட்டுத் தெய்வமா? திராவிடத் தெய்வமா? என்பதிலே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சக்தி வழிபாடு முதன்மை பெற்று விளங்கும் வங்காளத்திலே காளி பிரதான தெய்வமாக விளங்குகிறாள். கரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறப் பெண்தெய்வத்தைக் குறிப்பிடும் 'கறுப்பி' என்பதற்கு நேரான வடமொழிப் பெயராகக் காளி என்பது வடமொழி அறிஞர்களாலே கொள்ளப்படுகிறது. காளி கருமையான நிறத்தவளாக இருப்பதனாலும் தமிழ்நாட்டுப்பட்டிதொட்டிகளிலெல்லாம் காணப்படுவதாலும் ஆரியர் அஞ்சி வணங்கிய தெய்வங்களுள் ஒன்றாக இருப்பதனாலும் அவள் திராவிடத் தெய்வமென்பது சிலருடைய கொள்கை.

இந்த அம்மை வழிபாடுகளோடு தமிழ் நாட்டுக் கண்ணகி வழிபாடும் கலக்கின்றது. போரிலே இறந்துபட்ட வீரர்களின் ஞாபகார்த்தமாக, நடு கற்கள் எடுத்து வழிபடும் முறை திராவிடர் களுக்குச் சிறப்பாக உரிய பெருங்கற் பண்பாட்டுக் காலத்திலே தொடங்கி, தமிழ் நாட்டிலே, வரலாற்றுக் காலத்திலும் தொடர்ந்தது. உடன்கட்டை ஏறும் கற்புடை மாதர்களுக்கு 'சதிக்கல்' எடுத்து வழிபடும் முறை, தமிழ் நாட்டுக்கு அயலிலுள்ள கருநாடக திராவிடச் சகோதரர்களிடையே வழக்கிலிருந்து வந்திருக்கிறது. கண்ணகி வழிபாட்டின் தோற்றத்திலே நடுகல் வழிபாடு, சதிக்கல் வழிபாடு என்னும் அம்சங்களும் கலந்து காணப்படுகின்றன. கண்ணகி வழிபாடு சேரநாடாகிய கேரளத்திலும், இலங்கையிலும் இன்றைய தமிழ்நாட்டிலும், இந்தியாவின் ஏனைய சில பகுதிகளிலும் பரவியதாகக் சிலப்பதிகாரத்திலிருந்து தெரியவருகிறது.

இலங்கையில் மட்டும் இப்பொழுது கண்ணகி வழிபாடு தனித்துவத்துடன் காணப்படுகின்றது. வடக்கிலும், கிழக்கிலும் கண்ணகையம்மன் என்ற பெயரிலே கண்ணகி வழிபடப்படுகிறாள். சிங்கள பௌத்த மக்களிடையே - சிறப்பாகக் கண்டியிலும், தென்மாகாணப் பகுதி களிலும் - கண்ணகி பத்தினித் தெய்வமாக வழிபடப் படுவதைக் காணலாம். இந்தியாவிலே கண்ணகி வழிபாடு பிறதாய்த் தெய்வ வழிபாடுகளிலே மறைந்து விட்டது. கேரளத்தின் கரையோரத்திலும் உட்பகுதி களிலும் இன்று சிறப்புடன் விளங்கும் பகவதி வழிபாட்டிலே கண்ணகி வழிபாடு மறைந்து விட்டது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு முதன் முதலிலே எடுத்த கோவில் கொடுங்கலூர்ப் பகவதி கோவிலாக இன்று விளங்குவதாக, ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். இன்றைய தமிழ் நாடெங்கும் மழைத் தெய்வமான மாரியம்மன் கோவில்கள் பல பெற்றுத் திகழ்கின்றாள். கண்ணகி வழிபாட்டிலே கண்ணகிக்குக் குளிர்ச்சி செய்வது முக்கியமான சடங்காக நடைபெற்று வந்தமையாலும், வெப்பு நோய்களை விலக்கக் கூடியவள் என்ற நம்பிக்கையிலே கடும் வெய்யிற் காலத்திலே கண்ணகி வழிபாடு நடைபெற்று வந்தமையாலும், கண்ணகி மாரித் தெய்வத்துள் மறைவது சுலபமாகிவிட்டது.

சமணம், பௌத்தம் என்பது ஒரு புறமாகவும் சைவம், வைணவம் என்பன மறு புறமாகவும் நின்று முட்டி மோதிய பல்லவர் காலம், சோழப் பெருமன்னர் கால முற்பகுதி என்பவற்றிலே, அம்மை வழிபாட்டின் சுவடுகள் காணப்படுகின்ற போதிலும் ஆண் தெய்வ வழிபாடே தலைமைத்துவம் பெற்று விளங்கியது. கி.பி பதினோராம் நூற்றாண்டில் இருந்து ஒரு முக்கியமான மாற்றம் காணப்படுகின்றது. சைவ, வைணவக் கோயில்களிலே, அம்மைக்கெனத் தனிச் சந்நிதி அமைக்கும் வழக்கம் தொடங்குகிறது. அச்சந்நிதிகள் காடக்கோட்டமெனப் பெயர்பெறு வதற்குச் சாசனச் சான்றுகள் பல உள. முழுமுதல் தெய்வமாகத் தமிழ் நாட்டிலே கணிக்கப்பட்ட சிவபிரான், திருமால் முதலிய ஆண் தெய்வங்களின் 'சக்தி' யென அம்மை கருதப்பட்டதுவும் அம்மையின் முக்கியத்துவம் அதிகரிக்க இடம் வகுத்தது.

விசயநகர நாயக்கர் ஆட்சிக் காலங்களிலே அம்மை வழிபாடு மேலும் சிறப்புறுகிறது. முஸ்லீம் படையெடுப் பினால் பாதிப்படைந்த வட இந்திய சக்தி உபாசகர்கள் பலர் தென்னிந்தியாவிலே பாதுகாப்புப் பெற்றுத் தம்முடைய நெறியை மக்களிடையே பரப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் சக்தி வழிபாட்டிலே பேருக்கம் காட்டினர். நவராத்திரி தமிழ் நாட்டிலே முக்கியமான பண்டிகையாக மாறுகிறது. துர்க்கை, இலக்குமி, சரஸ்வதியாகிய மூவரும் சக்தியின் மூன்று முக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு வருக்கும் மும்மூன்று இரவுகள் பூசை பெறுகின்றனர். 'சப்தமாதர்' எனப்படும் ஏழு பெண் தெய்வங்கள் வழிபாடு பல்லவர் காலத்திலே சாளுக்கியர் நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குள் புகுந்தது. ஏழு பெண் தெய்வங்களை எவரெவர் எனப் பெயரிடும் முறையில் வேறுபாடு காணப்படுகிறது. இவர்களை 'கன்னிமார், நாச்சிமார்' எனவும் வழங்குவதுண்டு. நாயக்க மன்னர் காலத்திலே அம்மை வணக்கம் செல் வாக்குப் பெற்றதற்கு இன்னொரு காரணமுண்டு. மன்னர்கள் பெரும்பாலும் வைணவர்களாகவும், தமிழர்கள் பெரும் பாலோர் சைவர்களாகவும் இருந்தனால், அம்மை இவர்களை இணைத்து வைக்கும் பலமாக மாறிவிட்டாள். சிவபெருமானுக் குத் தேவியாகிய அம்மை திருமாலின் தங்கையாகக் குறிக்கப்படுவதைப் பல இடங்களிலே காணலாம்.

சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த குமரகுருபர சுவாமிகளின் அம்மை வழிபாடு எவ்வாறு அமைந்ததென் ஆராய்வது சுவைபயப்பது. சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் தோன்றியதற்குப் பின் தமிழ் நாட்டிலே வாழ்ந்த பெரும் புலவர்கள் பலர் வெவ்வேறு வழிகளிலே சென்றிருக் கிறார்கள். அருணகிரிநாதர் கௌமார மார்க்கத்தினர் போல முருக வணக்கத்துக்கே முதன்மை வழங்கி, சந்தங்களுடன் கூடிய பக்திப் பாடல்களைப் பாடிக் குவித்திருக் கிறார். சிவப்பிரகாச சுவாமிகள் கருநாடக நாட்டிலே பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலே உருவான இலிங்காயதம் அல்லது வீர சைவம் என்ற புதிய சமயப் பிரிவின் பிரசாரகராக ஒருவகைக் கற்பனை மிகுந்த பக்திப் பாடல்களைப் பல்வேறு பிரபந்த வடிவங்களிற் பாடியுள்ளார். தாயுமானவரைச் சைவசித்தாந்தி என்று கூறுவதற்கு இடமுண்டாயினும் அவருடைய சமய நெறியிலே வேதாந்த நெறியும், தமிழ் நாட்டுச் சித்தர் மரபும் பின்னிப் பிணைந்திருப் பதைக் காணலாம். இராமலிங்கசுவாமிகள் சைவசித்தாந்தத்தை நிராகரிக்காத போதிலும், சுத்தசமரச சன்மார்க்கத்தின் பிரசாரகராகக் காணப்படுகிறார்.

பதினான்காம் நூற்றாண்டிலிருந்து பாண்டிய நாட்டின் வடபகுதியும் தமிழ் நாட்டின் ஏனைய பகுதிகளும் குழப்பங்கள் மிகுந்த அந்நிய மதத்தினர், அந்நிய மொழியினர், அந்நிய இனத்தினர் என்போர் படையெடுப்புகளால் தமிழரல்லாதும் தமிழ் நெறியுணராதாரதும் வேட்டைக் காடாக மாறிய சூழ்நிலையில் பாண்டிய மரபினர் ஆட்சி தென்பாண்டி நாட்டிலே மட்டும் சிலகாலம் தொடர்ந்தது. பொருநையாகிய தாமிர பரணியாற்றை மையமாகக் கொண்ட திருநெல்வேலிப் பிரதேசம் தமிழர் பண்பாட்டுக்கு நிலைக்கள னாகியது. இதே காலத்தில் இலங்கையில் யாழ்ப்பாண அரசும் தமிழர் பண்பாட்டை அழியாமற்பேணி, வரலாற்றுத் தேவை யைப் பூர்த்தி செய்தமை நினைவு கூரத்தக்கது. பொருநையாற்றங்கரை புனிதப் பிரதேசமாக மாறிக் கொண்டிருந்த வேளையிலே ஆற்றங்கரையிலிருந்த ஊர்கள் பலவற்றுக்குச் சைவர்கள் கைலாச மென்றும், வைணவர்கள் திருப்பதி யென்றும் பெயரிட்டனர். தமிழ்நாட்டிலிருந்த பிரபல ஆதீனங்களின் முக்கியமான கிளைகள் திருநெல்வேலியில் இயங்கின. சைவசித்தாந்தத்தைத் தூய முறையிற் பேணுவன என்ற பெருமை திருநெல் வேலிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இக்காலச் சூழலிலே ஏற்பட்டிருக்க வேண்டும். சைவசித்தாந்தத்தின் தூண்களெனக் கூறத்தக்க குமரகுருபர சுவாமிகளையும், சிவஞான முனிவரையும் தமிழ் இனத்துக்கே தந்து வான்புகழ் கொண்டது தென்பாண்டி நாடு.

குமரகுருபரசுவாமிகள் தலைசிறந்த சைவசித்தாந்தியாவார். சைவ சமயத்தில் உதித்துச் சைவ ஆசிரியர் ஒருவருக்கு அடியவராகிச் சைவசந்நியாசம் பூண்டு வாழ்ந்த இவருடைய சைவப் பற்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசிந்தாந்த நூற் பயிற்சியும், மூர்த்தி, தல, தீர்த்தங்களில் உள்ள அன்பும், குருபக்தியும் தொண்டர்பாலுள்ள பெருமதிப்பும் அளவிடற்கரியவையென உ.வெ. சாமிநாதையர் எடுத்துக் காட்டுவர். இவருடைய சைவசமயப் பணி ஒரு வகையிலே சைவ சமய குரவர் நால்வர் பணியோடு ஒப்பிடத்தகுந்தது. பாரத நாட்டின் தென் எல்லையிலே பொருநை யாற்றங்கரையிலே ஒதுங்கிக் கொண்டிருந்த சைவசித்தாந்தத்தை புனிதம் மிக்க காசிக்கும், கங்கைக் கரைக்கும் எடுத்துச் சென்று, அற்புதங்கள் சில செய்து காசியில் மடம் அமைத்துச் சைவ மறுமலர்ச்சிக்கு இவர் உதவினார். இத்தகைய சைவசித்தாந்தி எத்தகைய அம்மை வழிபாட்டில் ஈடுபட்டாரென நோக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

அம்மை வழிபாடு பற்றித் தமிழில் எழுந்த செந்நெறி இலக்கியங்கள் சிறு தொகையினவே. "எங்கெங்கு காணினும் சக்தியடா, ஏழுகடல் அவள் வண்ணமடா" என்று பாடத் தொடங்கிய பாரதிதாசன் வெகு விரைவில் திராவிடக் கழகத்தின் பிரசாரகனாக மாறிவிட்டதால், அவனுடைய பக்தி ஊற்று கொதிநீராக மாறிவிட்டது. புதுமைக் கவி சுப்பிரமணிய பாரதியாரே அம்மையைப் பல்வேறு கோணங்களில் நின்று நோக்கிக் குறிப்பிடத்தக்க அளவான தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளார். அன்னையை வேண்டுதல், ஓம் சக்தி, பராசக்தி, சக்தி, சக்தி விளக்கம், சக்திக் கூத்து, சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம், காளி தருவாய், மகா காளியின் புகழ் முதலிய தோத்திரங்களைக் காளி மேலேயே பாடியுள்ளார். சிவசக்தி, முத்துமாரி முதலிய மூர்த்தங்களைப் பாடியுள்ள பாரதியார் நவராத்திரிப் பாட்டுப் பாடியதோடு திருமகள் துதி, திருமகளைச் சரண் புகுதல் முதலியவற்றை இலக்குமி மேலும், கலைமகளை வேண்டுதல், வெள்ளைத் தாமரை முதலியவற்றைச் சரஸ்வதிமேலும் பாடியுள்ளார். கண்ணனைப் பெண்ணாக உருவகித்து கண்ணம்மாவின் காதல், கண்ணம்மாவின் நினைப்பு, கண்ணம்மாவின் எழில் முதலியவற்றைப் பாடிய பாரதி வைணவ, சக்தி வழிபாடு தொடர்பாக ராதைப் பாட்டும் இயற்றியுள்ளார். அபிராமிப்பட்டர் ஆக்கிய அபிராமியந்தாதியும் சிறந்த அம்மை வழிபாட்டு இலக்கியமாகக் காணப்படுகிறது.

இவை தவிர ஏனைய சிறந்த சக்தி வழிபாட்டிலக்கியங்கள் யாவும் குமரகுரு பரரோடு தொடர்பு படுத்துகின்றன. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லிமாலை, மதுரை மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்று ஐந்து பிரபந்தங்கள் சில ஏட்டுப் பிரதிகளிலே கண்டுபிடிக்கப்பட்டு, அச்சாகி வெளியாகியுமுள்ளன. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலையிலிருந்து இதன் ஆசிரியர் தேவி உபாசகரென்பதும் அவ்வுபாசனையால் வாக்குவன்மை பெற்றவரென்பதும் தெரிய வருகின்றன. குறம் என்ற பிரபந்தம் பாட்டுடைத் தலைவனைக் காமுற்ற தலைவி ஒருத்தியைக் கண்டு குறத்தி குறி கூறுவதாக அமைப்பது மரபு. இங்கே பாட்டுடைத் தலைவி மீனாட்சியம்மை ஆதலினால் சொக்கர் பாற் கருத்திழந்த தலைவி கூறப்படுகிறாள். மீனாட்சியம்மையின் திருநாமமும், புகழும் சார்த்துவகையாற் சொல்லப் பெறுகின்றன. சிவகாமியம்மை இரட்டை மணிமாலையில் உள்ள பல செய்யுட்களில் இறைவனுடைய பெருமையிலும் இறைவியின் பெருமை பெரிதென்பது குறிப்பிடப்படுகின்றது. வரிசைப் படுத்தப்பட்டுள்ள ஐந்து பிரபந்தங்களிலே மேலே சுட்டப்பட்ட மூன்றும் குமரகுருபரராற் பாடப்பட வில்லை என்பது பதிப்பாசிரியர் சாமிநாதையர் முடிவு.

எனவே குமரகுருபரர் பாடிய அம்மை வழிபாட்டுப் பிரபந்தங்கள் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், சகலகலாவல்லிமாலையுமாகும். சகலகலாவல்லிமாலை பாடிக் கலைமகள் அருள் பெற்று இந்துஸ்தானி மொழியில் வல்லுநரானாரென்றும், இந்துஸ்தானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் முகமதிய பாதுஷாவுடன் உரையாடி, காசியில் சைவ மடம் அமைத்துச் சமயப்பணி புரியச் சலுகை பெற்றாரென்றும் கூறப்படுகின்றன. தாமசம், சாத்துவீகம், இராசதம் என்ற முக்குணங்கள் ஒவ்வொன்றும் முதன்மை பெற்ற நிலையிலேயே துர்க்கை, கலைமகள், திருமகள் என்ற சக்தி மூர்த்தங்கள் உருவாகின்றன. நவராத்திரியிலே மேற்படி மூவரும் வழிபடப்படினும் வழிபாடு முழுவதும் சாத்துவீக குணத்தவளான சரஸ்வதிக்கே உரியதாகக் கூறப்படுவதுண்டு. எளிய நடையில் அமைந்துள்ள சகலகலாவல்லி மாலை நவராத்திரி காலப் பாராயண நூலாக இன்று விளங்குகிறது. 'வெண்டாமரைக் கன்றி நின்பதம்' என்று தொடங்கிப் பத்துப் பாடல்களால் இது அமைந்துள்ளது.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் தமிழில் அரிதாகக் கிடைக்கும் பெண்பாற் பிள்ளைத் தமிழ் பிரபந்தங்களுள் ஒன்றாகும். ஆண்பாற் பிள்ளைத் தமிழாக முருகன்மேல் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் செய்துள்ள குமரகுருபரர் இரண்டு பிள்ளைத் தமிழ்களிலும் சப்தமாதர் வணக்கம் காப்புச் செய்யுட்களுக்குள் பாடியுள்ளார். மாகேசுவரி, இந்திராணி, காளி, அபிராமி, நாராயணி, கௌமாரி, வாராகி என்போரே குமரகுருபரரால் பாடப்படும் எழுவராவர். தலைவர்கள் செயல்களை அவர்கள் சக்திகளுக்கும் ஏற்றிக் கூறும் மரபுப்படி எழு மகளிர் செயல்கள் இவ்விரண்டு பிள்ளைத்தமிழ்க் காப்புக்களிலும் பாடப்பட்டுள்ளமையைக் காணலாம். திருமகள், கலைமகள், துர்க்கை முதலிய மூவரையும் தனித்தனிச் செய்யுள்களிலே காப்புத் தெய்வங்களாக மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலே பாடிய குமரகுருபரர் தலத்து அம்பிகையாகிய பதையல் நாயகியைத் தனிச் செய்யுளிலே பாடியதனைப் போலும் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழிலே துர்க்கையைத் தனியே பாடவில்லை.

நாயக்க மன்னராட்சிக் காலத்திலே சக்தி வழிபாடு மேம்பாடுற்றமையால் சக்திக்கு முதன்மை வழங்கும் போக்குக் காணப்படுகிறது. சிவபெருமானுடைய சக்தி மூன்று முக்கியமான சிவஸ்தலங்களிலே கண்ணின் தன்மை கொண்டு, மூன்று பெயர்கள் கொண்டு தமிழ் நாடெங்கும் பிரபலமெய்துவதை இக் காலத்திலே காணலாம். காசி விசுவநாதரின் சக்தி விசாலாட்சியாகவும், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதரின் சக்தி காமாட்சியாகவும், மதுரைச் சொக்கநாதரின் சக்தி மீனாட்சியாகவும் போற்றப்படும் நிலை தோன்றுகிறது. முகமதியர் படையெடுப்புக்களினால் ஏகாம்பர நாதர் கோவிலும், சொக்கநாதரின் கோவிலும் அழிய, நாயக்கர் காலத்திலே திருப்பிக் கட்டப் பட்ட புதிய கோயில்களிலே காமாட்சியும், மீனாட்சியும் முக்கிய தெய்வங்களாகின்றனர். கோவில்கள் தாமும் காஞ்சி காமாட்சி கோவிலெனவும் புதுப் பெயர்கள் பெறுகின்றன. சிதம்பரத்து ஆடவல்லானாகிய சபாநாயகரது பிரியை சிவகாமியெனச் சிலரால் பாராட்டிப் பாடப்பட்ட போதும் அக்கோவிலிலே சிவபிரானுடைய முதன்மை பாதிக்கப்படவில்லை.

திருமலைநாயக்கர் மதுரைமீனாட்சியம்மை கோவிலை ஏறத்தாழ இன்றைய வடிவத்திலே புதுக்கியமைத்தவர். குமரகுருபரர் தலயாத்திரை புறப்பட்டு மதுரையிலே தங்கியபோது மீனாட்சியம்மைமேல் பிள்ளைத் தமிழ் பாடி திருமலைநாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றினார். அதனை அரங்கேற்று கையில் மீனாட்சியே குழந்தையுருவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்தனளென்று குமரகுருபரர் முத்துப் பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கையில் தம் திருக் கழுத்திலிருந்து முத்துமாலையொன்றை எடுத்து இவருக்கு அணிவித்து விட்டு மறைந்தனளென்றும் கூறுவர். அந்தப் பிள்ளைத் தமிழைக் கேட்டு மன மகிழ்ந்த திருமலைநாயக்கரும் குமரகுருபரருக்குப் பல பரிசில்களை அளித்து வழிபட்டனர்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் நூறு செய்யுள்களால் அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சியைக் குழந்தையாக உருவகித்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாடப்பட்டுள்ளது. குழந்தை பிறந்து ஏழாவது நாள் காப்பிடலென்னும் வழக்கம் ஒன்று உண்டு. அதனை ஒட்டிய இலக்கிய வழக்கே இக் காப்புப் பருவம், பொருள் தெரியாத ஒலியை எழுப்புஞ் செங்கீரைப் பருவம், தாலாட்டுப் பாடிக் குழந்தையைத் துயிலச் செய்யும் தாலப் பருவம், கையோடு கைசேர்த்துக் கொட்டுஞ் சப்பாணிப்பருவம், குழந்தையை முத்தம் தரும்படி தாயாரும், பிறரும் வேண்டும் முத்தப் பருவம், தளர்நடையிட்டு வரும் குழந்தையை வாவென்று அழைக்கும் வருகைப் பருவம், சந்திரனைக் குழந்தையோடு விளையாட அழைக்கும் அம்புலிப்பருவம், பாட்டுடைத் தலைவியை அம்மானையாடும்படி கூறும் அம்மானைப் பருவம், பாட்டுடைத் தலைவியை நீராட அழைக்கும் நீராடற்பருவம், பாட்டுடைத் தலைவியை ஊஞ்சலாட வேண்டும் என அழைக்கும் ஊஞ்சற் பருவம் என இவை யொவ்வொன்றிலும் குமரகுருபரர் குழந்தை மீனாட்சியம்மைபற்றிப் பப்பத்துச் செய்யுள்கள் இயற்றியுள்ளார்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் மிகவும் பிரபலமான செய்யுள் பின்வருமாறு,

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுங்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

## சிறப்பெல்லாம்

நரசிங்க பைரவ மூர்த்தியாய்
வடிவங்கொண்டு - துர்க்கா
புரமேவும் அன்னை அருளாட்சி
சிறந்தோங்க காவல்தெய்வமாய்
தேரடியுறைந்து தேவரைக்
காத்து அருளும் உன்னைச்
சிரம் தாழ்த்தி வணங்கினோம்
சிறப்பெல்லாம் தருவாய் ஐயா!

## தொண்டு செய்யும் வடிவில்

ஒன்றாய்ப் பலவாய் உள்ளும் புறமுமாய்
உருக் கொண்டருளும் சக்தியை
தொண்டு செய்யும் வடிவில் நாம்
கண்டு எம்மனதிலிருத்தி
சண்டேஸ்வரியை மூன்று முறை
கையைத் தட்டி வணங்கிவேண்ட
என்றும் தொழுத பலன் கிட்டும்
அன்னை ஸ்ரீ துர்க்காதேவியை!

இராம ஜெயபாலன்
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு ஆண்டுகள் வாழ்வில் சைவப் பெரியார் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி (23-09-2009)

*திரு. க. ஏழூர்நாயகம் அவர்கள்*

---

தெல்லிப்பழை காசிவிநாயகர் கோவிலடியை வதிவிடமாகக் கொண்டு நூறு ஆண்டுகள் நிறைவான வாழ்வைக் காண்கிறார். "சுந்தரவாத்தியார்" என்று எல்லோராலும் அழைக்கப்படும் சைவப்பெரியார் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி அவர்கள். மனித வாழ்விலே நூறு ஆண்டுகள் என்பது அபூர்வமானதொன்று. சைவ மரபைப் பேணி, சீரான ஒழுக்க நெறியில் இறைவழிபாட்டுடனான இவரது வாழ்வு எமக்கு ஓர் அனுபவப் பாடமாகும். திருமுறை ஓதுமுன் உரைக்கப்படும் திருச்சிற்றம்பலம் என்ற சொற்றொடரை தந்தையாரின் பெயரிலும், சமய குரவர் நால்வரில் ஒருவரான "சுந்தரமூர்த்தியை" தனது பெயரிலும் கொண்டு வாழும் இப்பெரியார் தம் பெயருக்கு ஏற்ப பொருத்தமான வாழ்வை மேற்கொண்டுள்ளார். திருமுறைகளிலும், புராணங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு தன்னை அவற்றில் ஐக்கியப்படுத்தி வாழ்ந்து வருகிறார். முதுமையிலும் தனது நாளாந்தக் கடமைகளிலும் திருமுறை பாராயணத்தையும், புராணப் படிப்பையும் மேற்கொண்டு வருவதுடன் தம்முடன் வாழ்ந்துவரும் இரு புதல்விகளையும் அதில் ஈடுபடுத்தி இல்லத்தில் நாடோறும் "நாதன் நாமம்" ஒலிக்கிறது. ஆசிரியப் பணிபூண்டு பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு கல்வி அறிவு ஊட்டிய ஆசானாவார். இன்றும் அவரிடம் கற்ற மாணவர்கள் காட்டும் பணிவும், மரியாதையும் இவரது பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமது ஆசிரியப் பணியுடன் சமய சமூகப் பணிகளில் மிகுந்த ஈடுபாடுகொண்டு பணியாற்றினார். மறைந்த மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களின் தலைமையில் இயங்கிய இந்துசமய விருத்திச் சங்கத்தின் செயலாளராக இவர் ஆற்றிய பணி பெருமையுடன் குறிப்பிடத்தக்கது. சைவ மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கவும் அவர்களிடையே இருந்த திறன்களை வெளிக்கொணரவும் சமய அறிவுப் போட்டி, நாவன்மைப் போட்டி, பண்ணிசைப்போட்டி, புராணபடனப் போட்டி, கதாப்பிரசங்க போட்டி என பல்வகைப் போட்டிகளை நடாத்தி இத்துறைகளில் அவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு காரணகர்த்தாவாக இருந்தார். மேலும் திருமுறைகளை பண்ணிசையுடன் ஓதுவதற்கு பொருத்தமான ஆசிரியர்களை ஏற்பாடுசெய்து கொடுத்தார். இத்துறைகளில் பங்குபற்றி தேர்ச்சி பெற்று ஆலயங்களில் திருமுறை ஓதவும், புராணபடனம் எம்போன்றோர்கள் செய்வதற்கு இப்பெரியார் இட்ட அடித்தளமே என்று நன்றியுடன் நினைவு கூருகின்றோம். சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் இவரை "வாத்தியார்" என மிகுந்த மரியாதையுடன் அழைப்பார்கள். துர்க்காதேவி ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெற்ற பன்னிரு திருமுறை பாராயண முற்றோதல் நிகழ்வில் இப் பெரியாரை முதன்மைப்படுத்தி பெருமைப்படுத்தினார். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து குடும்பம், மக்கள், மருகர், பேரர், பூட்டப்பிள்ளைகள் என கிளைகளாகப் பிரிந்து இன்று எமது தெல்லிப்பழைக் கிராமத்திற்கு பெருமை தந்து கொண்டிருக்கும் இப்பெரியாரை இவரது குலதெய்வமான குருநாதசுவாமியின் அருள்வேண்டி வாழ்த்தி வணங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வாழ்வு தரும் நவராத்திரி

தொன்று தொட்டுச் சைவப் பெரு மக்களால் மிகவும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டு வரும் விழாக்களுள் நவராத்திரி விழாவும் ஒன்றாகும். நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள்படும். புரட்டாதி மாதத்தில் வரும் பூர்வ பட்சத்தின் முதல் நாளிலிருந்து அதாவது பிரதமைத் திதியிலிருந்து நவமி ஈறாகிய ஒன்பது நாட்களும் திருவருட் சக்தியும் உலக மாதாவுமாகிய பராசக்தியை விஷேசமாக வழிபட்டு நாம் ஈடேறுதற் குரிய புண்ணிய காலமாகும். பார்வதி தேவியை கும்பத்திலே எழுந்தருளச் செய்து விதிப்படி பூசித்து அனுட்டிக்கப்படும் சிறந்த விரதம் இதுவாகும். இந்த நாட்களில் தினந்தோறும் காலையில் எழுந்து நீராடி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு தேவியை வழிபட வேண்டும்.

இவ்விழா, கலைகளின் புனித தத்துவத்தைப் புலப்படுத்துவது மட்டு மன்றி அன்னை பராசக்தியின் அருளைப் பெறப் பெரிதும் துணை புரிகின்றது. புவனம் பதினான்கையும் பூத்தவளாகிய புவனேஸ்வரியை உள்ளன்புடன் வழிபட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வழி காட்டும் புண்ணிய காலம் இந்த நவராத்திரியாகும். உலகின் கண்ணேயுள்ள சராசரங்கள் தோறும் அழகின் அம்சமாக விளங்கும் அன்னை அபிராம சுந்தரியை அன்புடன் வழிபாடு செய்து அத்தாயின் அருளைப் பெறுகின்ற தூய்மையான காலம் இதுவாகும்.

மக்கள் உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டற் பாலனவாகிய வீரம், செல்வம், கல்வி, ஆகிய பேறுகளை அருளுமாறு துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்னும் மூன்று தெய்வங்களையும் முறையே மும்மூன்று இரவுகளில் வணங்குதல் முறை. வீரத்துக்குரிய சக்தியான துர்க்கா தேவியை முதல் மூன்று நாட்களும், செல்வத்தை வழங்கும் சக்தியான இலக்குமி தேவியை அடுத்த மூன்று நாட்களும், கல்வித் தெய்வமான சரஸ்வதி தேவியை இறுதி மூன்று நாட்களும் விசேட வழிபாடு செய்வதற்கென அமைந் துள்ளன. இந்த ஒன்பது நாட்களிலும் எமது இல்லங்களை புனிதமாக வைத்திருக்க வேண்டும். எமது வீடுகளில் கொலு வைத்து அழகுபடுத்து வதுடன், மாவிலை தோரணங்கள், மலர்கள், மங்கள விளக்குகள், கொண்டு அவைகளை அலங்கரிக்க வேண்டும்.

சக்தி ஒன்றே ஆனால் சக்தியின் திரு நாமங்களோ பலவாகும். மகேஸ்வரி, மனோன்மணி, பர்வதவர்த்தனி, தையல்நாயகி, இராஜராஜேஸ்வரி, வாலாம்பிகை, அபிராமசுந்தரி, உமாதேவி, காமாட்சி, சிவகாமசுந்தரி, தடாதகைப் பிராட்டி, விசாலாட்சி, காளி, விஜயலட்சுமி, வீரலட்சுமி, தனலட்சுமி, காயத்திரி, சாவித்திரி, துர்க்கை முதலான பல திருநாமங்களைப் பெற்றுத் திருவருள் பாலிப்பாள். இந்த நவராத்திரி தினங் களில் முறையே மகேஸ்வரி, கௌமாரி, வராகி, மகாலட்சுமி, வைணவி, இந்திராணி, பிராஹமி, நரசிம்மி, சாமுண்டி என்கின்ற நவ சொரூபிகளாகி விளங்கி ஆன்மாக் களுக்குக் கருணை புரிவாள்.

இம்மையில் நல்வாழ்வையும், மறுமையில் முத்தி இன்பத்தையும் தரவல்லது இந்தச் சக்தி வழிபாடே. இந்த வழிபாட்டைப் பக்தியுடன் மேற்கொண்ட அடியார்கள் பலர் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்ந்தனர் எனப் புராணங்கள் வாயிலாக அறிகிறோம். அன்பின் வடிவமான அன்னையை உள்ளன்புடன் பூசித்து வழிபடுபவர்களை வாழ்வில் எத்தகைய துன்பங்களும் அணுகமாட்டா என்பது ஆன்றோர் வாக்கு. உலக மக்களைக் காக்கும் தெய்வம் விஷ்ணு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பெருமாளின் சக்தியே இலக்குமியாகும். இலக்குமியை வழிபடும் அடியார்கள் சகல செல்வங்களையும் பெறுவர். இலக்குமி பொன்னிற மேனியையும் இடது கையில் வில்வம் பழமும், வலது கையில் தாமரை மலரும் தாங்கிய அபய வரத கரங்களுடன் செந்தாமரை மலரில் வீற்றிருப்பாள். அழகினைத் திருமகள் என்றும், அறிவினைக் கலைமகள் என்றும் நம் முன்னோர்கள் போற்றி வழிபட்டு வந்தனர். வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைமகளை - அறிவுத் தெய்வத்தை போற்றிப் பரவாத புலவர் பெருமக்கள் இல்லை என்றே சொல்லாம். சகல கலைகளுக்கும் தெய்வமாக விளங்குவதால் கலைஞர்கள் நவராத்திரி காலத்தில் சரஸ்வதியை விசேட ஆராதனை செய்து அவள் அருளைப் பெறுவார்கள்.

வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும் கலைவாணியின் திருக்கரங்களுள் ஒன்றில் ஏடு இருப்பதைக் காணலாம். மற்றக் கரத்தில் செபமாலை இருக்கின்றது. மற்ற இரண்டு கரங்களும் வீணையை மீட்டுக் கொண்டேயிருக்கின்றன. இதன் தத்துவத்தை ஆழ்ந்து சிந்திப்போமேயானால் ஏடு பயனுள்ள கல்வியைக் கற்க வேண்டும் என்பதையும், செபமாலை கற்றவைகளைத் தியானம் செய்ய வேண்டும் என்பதனையும், வீணையை மீட்டல் கற்றவற்றைத் தினந்தோறும் அப்பியாசம் செய்து வரவேண்டும் என்பதையும் எமக்கு அறிவுறுத்திக் கொண்டிருப்பது புலனாகும். மகா நவமிக்கு அடுத்த நாளாகிய தசமித் திதியை விஜயதசமி என்று கொண்டாடு கின்றனர். மானம்பூ என்று மக்களால் கொண்டாடப்படுவதும் இத்தினமே. ஆலயங்கள் தோறும் விசேட பூசை, வழிபாடுகள் நடைபெறும். இந்த விஜய தசமித் தினத்திலே அட்சராரம்பம், வித்தியாரம்பம் செய்வது நல்லது. இந்த நன்நாளிலே வெற்றியை ஈட்டித்தரும் தினத்திலே பல்வேறு புதுமுயற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

இந்த நவராத்திரி விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் அனுட்டிப்போர் வீரம், செல்வம், கல்வி முதலிய சகல சித்திகளையும் இம்மையிலே பெறுவார்கள் என்பது உறுதி. எனவே, உலகு அனைத்தையும் படைத்து உலகத்தின் ஒவ்வொரு அணுவிலும் உறைகின்ற அந்த மாபெரும் சக்தியை இந்த நவராத்திரி நாளில் நாமும் வழிபட்டு நல்வாழ்வு பெறுவோமாக.


சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள்
உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு
ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும்போதே

அப்புண்ணிய காரியத்துக்கு
ஒப்புதல் தாருங்கள்.


தொடர்புகளுக்கு :
ஆறு. திருமுருகன்
தொலைபேசி :
021-2226550

கண் வைத்திய நிபுணர்கள் :
குகதாசன் 021-2223545
சிவேந்திரா 021-2223149
யாழ். போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா பூஜை

வாரங்களில் எல்லாம் சிறந்தது மங்கள வாரம். மங்கள வாரம் என்ற சொல் மங்களன் ஆன செவ்வாய்க் கிரகத்திற்கு உரிய நாள்என்பதைக்கூறுகிறது. மங்களவாரம் எல்லா மங்களங்களுக்கும் இருப்பிடமானது. மற்ற வாரங்களில் செய்து பலன் தராத எவ்வளவோ காரியங்களுக்கு இந்த வாரம் பலன்தரும்நன்செய் நிலமாக விளங்குகின்றது.

மங்கள சண்டிகை பூஜை, மங்கள கிரக பூஜை, மங்களாம்பிகை பூஜை, மங்கள துர்க்கா பூஜை போன்றவைகளும், இன்னும் மனச்சாந்திக்கும் நீண்ட துயர்கள் போவதற்கும் உரிய பூஜைகளுக்கும் இந்த நாள் ஏற்றதாகும்.

விவாகமாகவேண்டிய கன்னிப் பெண்கள் இந்த மங்கள வாரத்தில் செய்ய வேண்டிய பூஜைகள் பற்றிப் பல நூல்கள் பேசுகின்றன. மங்கள வாரத்தில் சூரிய உதயத்திற்கு முன்னரே எழுந்து சூரியன் கிழக்கு மண்டலத்தில் எழும்பொழுது செய்ய வேண்டிய பூஜைகள் சிறப்புடையன என்று மந்திர சாஸ்திர நூல்கள் பேசுகின்றன. இந்த மங்கள வாரத்தில் மாலை நேரத்தில் திருவிளக்கேற்றி வழிபாடு செய்வது மனச்சாந்திக்கு மருந்தாகவும், துயரங்களைப் போக்கும் துணையாகவும் விளங்குகின்றது.

மங்கள வார இராகு காலத்தில் எல்லா நலன்களையும் வாரி வழங்கும் ஸ்ரீ துர்க்கா சன்னிதியில் செய்ய வேண்டிய பூசனைகள் பற்றித் தந்திர வல்லுநர்கள் வெகுவாகச் சொல்லுவார்கள்.

எல்லாக் காரியங்களும் மங்களமாக முடியவேண்டும் என்று நாம் நினைக்கின்றோம். மங்களமாக முடிவதற்குப் பிரார்த்தனைகள், பூசைகள் எல்லாம் செய்கிறோம். எல்லோராலும் விரும்பப்படும் மங்களம் மங்கள வாரத்தின் உள்ளே இருந்துதான் வெளிவருகின்றது.

தானும் மங்களமாக விளங்கி, மற்ற வாரங்களையும் மங்களப்படுத்தி அவரவர் விரும்பும் காரியங்களை மங்களப்படுத்தி, மங்கள வடிவாகவே விளங்குவதினால்தான் இந்த வாரம் மங்கள வாரம் என்று சொல்லப்படுகின்றது. உலகியலில் நமக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டும் என்று நமக்கு உதவி செய்கிறவர்களை நாடிப் போகிறோம். அவர்கள் தங்களால் அக்காரியம் முடியாது என்றால் எங்களை மற்றவர்களிடம் அழைத்துச் சென்று அந்தக் காரியத்தை நமக்கு முடித்துக் கொடுப்பார்கள் இதைப் போலவே பல வாரங்கள் இருக்கின்றன.

ஆனால், மங்கள வாரமோ அப்படியில்லாமல் எல்லாக் காரியங்களையும் தானே முடிக்கிறது. எல்லா மங்களங்களுக்கும் அதுவே உறைவிடமாகவும் இருக்கின்றது.

இப்படியெல்லாம் உயர்ந்ததான இந்த மங்கள வாரம், காமதேனுவைப் போல விரும்பியதெல்லாம் உடனே வழங்குவதாகவும், கற்பக தருவைப்போலக் கேட்டதைக் கேட்டபடியே கொடுப்பதாகவும், சிந்தாமணியைப்போல நினைத்ததை நினைத்த உடனேயே வழங்குவதாகவும், விளங்குகின்றது. இந்த உண்மைகள் மங்கள வாரத்தை நன்கு புரிந்து கொண்டவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

மங்கள வாரத்தில் மங்கள கிரக பூஜையை அதிகாலையில் செய்ய வேண்டும். மஞ்சள் புஷ்பங்களால் பூஜிப்பது சிறப்பு. மங்கள கிரகத்தை தீபத்தில் தியானிக்கலாம்.

ஹ்ரீம் - லம் - ஹ்ரீம்

தரணீ கரப்பஸம்பூதம் வித்தயு காந்தி ஸமப்ரபம் குமாரம் சக்தி ஹஸ்தம்தம் மங்களம் ப்ரணமாம்யஹம்.

ஹ்ரீம் - லம் - ஹ்ரீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஸ்லோகத்தால் தியானிக்கலாம். 108 அல்லது 54, 18 இவைகளில் ஏற்ற ஒரு எண்ணிக்கையில் மங்கள கிரக காயத்திரியை ஜெபம் செய்து பூஜிக்க வேண்டும். மஞ்சள் வாழைப்பழம், துவரம்பருப்புப் பொங்கல் இவைகள் சிறந்த நைவேத்தியங்கள். வாழைப்பூவையும், துவரம் பருப்பையும் இந்தக் கிரகத்தின் ப்ரீதிக்காகத் தானம் செய்யலாம்.

இவ்விதம் மங்கள வாரத்தில் மங்கள கிரகத்தைப் பூஜை செய்து வந்தால் செவ்வாய்க்கிரகம் நல்லருள் பொழியும். மங்கள சண்டிகா பூஜை மங்கள வார பூஜையில் ஒன்று.

எல்லா நன்மைகளையும் அடைவதற்காகவும் மங்களங்களைப் பெறுவதற்காகவும் மங்கள சண்டிகையைப் பூஜித்தால், பூஜிப்பவனுக்கும் அவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பெரிய நன்மைகள் கிடைக்கும். மங்கள சண்டிகைக்கு மஞ்சள் அரளிப் பூவினால் அர்ச்சிப்பது சிறப்பு. எலுமிச்சம் பழச் சாதம் சிறந்த நைவேத்தியங்களில் ஒன்று.

மங்கள வாரத்தில் கௌரி பூஜை, கன்னிகைகளால் மிக மிக விரும்பிச் செய்யப்பட வேண்டியவைகளுள் ஒன்று. கௌரியைப் பூஜிக்கும் கன்னிப் பெண்களுக்கு விவாகத் தடங்கல்கள் போகும். கௌரி பூஜையைக் காலை 8-00 மணிக்குள் செய்வதுதான் நல்லது.

தரையைச் சுத்தப்படுத்திக் கோலம், செம்மண் முதலியவைகள் இட்டு அதன்மீது குத்து விளக்கை அழகுபடுத்தி, பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

ஐம் - க்லீம் - ஸௌ

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதகே சரண்யே த்ர்யம்பிகே தேவி நாராயணி நமோஸ்துதே.

ஸௌம் - க்லீம் - ஐம்

என்ற மந்திர ஸ்லோகத்தைக் கூறி ஆவாகன உபசாரங்கள் செய்யலாம். இந்த ஸ்தோத்திரத்திலேயே அர்ச்சனை செய்வதும் உண்டு. கௌரி பூஜையைச் செய்துதான் ருக்மணி தேவி கிருஷ்ணனைக் கணவனாக அடைந்தாள்; இது புராணம். இன்னும் எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன. இந்தக் கௌரியைக் காத்யாயனி என்று சொல்லுவோம். அவளே துர்க்கை! அவளே அண்ட சராசரங்கள் அனைத்தையும் காத்து நிற்பவள். ருக்மணி தேவி காத்யாயனி விரதத்தைக் கடைப்பிடித்த பொழுது கீழ்க்கண்ட ஸ்தோத்திரத்தைக் கூறி வழிபட்டாள்.

க்லீம் - க்லீம்

காத்யாயனி மஹாமாயே மஹாயோகின்ய தீஸ்வரி நந்த கோபஸுதம் தேவிபதிம்மே குருதே நம

க்லீம் - க்லீம்

இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்லி நமஸ்கரித்து தீபத்தின் திருவடியில் புஷ்பங்களைப் போட வேண்டும். இப்படியே 18, 54, 108 முறைகள் அவரவர் உடல் நலப்படி செய்யலாம்.

தீபத்தைப் பிரதட்சணமாக வந்து, நமஸ்காரம் செய்வது சிறப்பிலும் சிறப்பு. தீபத்தின் பாதத்தில் இடுவதற்கு ஏற்ற மலர் தங்க அரளி, மஞ்சள் கொழுக்கட்டைப் பூ, பாரிஜாத புஷ்பம்.

சிறப்புடைய இந்தத் தேவிக்கு ஏற்ற நைவேத்தியம் சர்க்கரைப் பொங்கல், மஞ்சள் வர்ண வெண் பொங்கல், தேன், கதலி, பலா, மாம்பழம்.

மங்கள வாரத்தில் துர்க்காதேவியைப் பூஜிப்பவர்கள் துக்கங்களிலிருந்து விடுபடுகிறார்கள். கலியுகத்தில் கைமேல் பலன் தருவதற்கு துர்க்காதேவி மூல தெய்வமாக விளங்குகிறாள். "துர்க்கை என்ற பெயர் வந்ததற்குக் காரணம் என்னவென்றால் அவள் துக்கத்திலிருந்து மற்றவர்களைக் காப்பாற்றுகின்றாள் என்பதால்தான்" என்று மகாபாரதம் பேசுகின்றது. தர்மபுத்திரர் தன்னுடைய தவறுக்காக துர்க்கா தேவியைப் பூஜை செய்தார். எல்லாக் காலங்களையும் உணர்ந்தவரான கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனைப் பார்த்துச் சொன்னார்: "ஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ஜுனா, துர்க்கா தேவியை ஸ்தோத்திரம் செய்; அவள் ஒருத்தியால் தான் எதிரிகளை வென்று நீ ஜெயத்தை அடைய முடியும்".

இதன்படியே அர்ஜுனனும் துர்க்கா தேவியை ஸ்தோத்திரம் செய்து அந்த அன்னையின் பேரருளால் வெற்றியைப் பெற்றான்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பாதாளத்திற்குச் சென்று வெகுநாளாகத் திரும்பவில்லை. வசுதேவர், தேவகி முதலியவர்களுக்கு மனக்கலக்கம். கிருஷ்ணனை நினைந்து உருகிக் கொண்டிருந்தார்கள். வெகுநாளாகியும் வராத கண்ணன் திரும்பி வருவதற்கு அவர்கள் துர்க்கா தேவியைத் தியானித்து பூஜை செய்து ஸ்தோத்தரித்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணனும் கல்யாணக் கோலத்துடன் வசுதேவர், தேவகி முன்னர் விரைவில வந்து சேர்ந்தார்.

துர்க்காதேவியை உபாசிக்கும் பக்தர்களுக்கு ஸ்ரீ துர்க்கா சப்த சதி என்ற ஸ்ரீதேவி மகாத்மியம் ஒரு சிறந்த வரப்பிரசாதம். இந்த மந்திர நூலில் துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற மூல தேவிகள் பேசப்படுகின்றனர். துர்க்காதேவியைப் பற்றிப் பல ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. சமீபத்தில் ஸ்ரீமான் அப்பய்ய தீட்சிதர் அருளிய 'துர்க்கா சந்திர கலா ஸ்துதி' எல்லோர்க்கும் உதவக் கூடியது.

தமிழில் நவராத்திரிக் கவசம், துக்க நிவாரண அஷ்டகம், ராகு கால துர்க்கா அஷ்டகம், துர்க்கா ரோக நிவாரண அஷ்டகம் ஏற்றன.

எல்லா உலகங்களுக்கும் தாயாக விளங்குபவள் துர்க்காதேவி. ஆனால் அவளோ கன்னி. கன்யாம் குமாரிணீம் என்று சாமவேதம் பாடுகிறது. துர்க்கா தேவியைப் போற்றிப் புகழாத தேவர்கள் இல்லை அம்பிகையின் சரீர கோஸங்கள் எல்லாம் சமஷ்டி தேவஸ்வரூபமாக விளங்குவதைத் தேவி மகாத்மியம் எடுத்துக் காட்டும்.

காலங்களுக்குள் காலமாகவும், புண்ணியங்களுக்குள் புண்ணியமாகவும், மங்களங்களுக்குள் மங்களமாகவும், ஷேமங்களுக்குள் ஷேமமாகவும், நன்மைகளுக்குள் நன்மையாகவும் துர்க்கா தேவி விளங்குகிறாள். தீமைகளை எதிர்க்கும் தீயாகவும், குற்றங்களைத் தட்டிக் கேட்கும் குரலாகவும், கயமையைக் கடிதில் உடைக்கும் தடியாகவும் துர்க்கா தேவி விளங்குகிறாள்.

துர்க்கா என்று சொல்பவர்கள் கூடச் சுகத்தை அடைந்து விடுகிறார்கள். துன்பங்களிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள். அவள் காலங்களைக் கடந்தவள். அவளை எதுவும் பாதிக்க முடியாது. அவளுடைய கருணைக்கு எல்லையும் கிடையாது.

எல்லாப் பெருமைகளும் நிறைந்த ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரியைப் பூசிப்பதற்கு ஏற்ற நாட்கள் பல இருப்பினும் வாரங்களில் அவளுக்கே உகந்ததாக விளங்குவது மங்களவாரமொன்றே. மங்கள வாரத்தில் துர்க்கா தேவியை மூன்று காலங்களிலும் பூசை செய்யலாம்.

தீபத்திலோ, கடத்திலோ, சித்திரத்திலோ, இயந்திரத்திலோ, ஹ்ருதயத்திலோ, பூஜிக்க வேண்டும். வேதோக்த பூஜை அல்லது தந்திர பூஜை சிறப்பு. இருந்தாலும் அவரவர்கள் சக்திக்கு ஏற்றபடி செய்யும் பூஜையை அம்பிகை பெரு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வாள்.

செவ்வாய்க்கிழமை அதிகாலையிலும் சாயங்காலத்திலும், ராத்திரியிலும் துர்க்கா தேவியைப் பூஜிக்கலாம். ஆசாரத்துடனும், அனுஷ்டானத்துடனும் சக்திக்கேற்றபடி பூஜிக்க வேண்டும்.

தீப பூஜை செய்பவர்கள் பசுஞ்சாணியிட்டு சுத்தப்படுத்திய பூஜை அறையைப் பயன்படுத்த வேண்டும். நடுவில் கோலமிட்டு, செம்மண் இட்டு அதன்மீது அரிசி அல்லது நெல்லைப் பரப்பித் தீபத்தை நடுவில் வைத்து ஏற்ற வேண்டும். தீபத்தில் தேவியை ஆவாகனம் செய்து முறைப்படி பூஜை செய்தல் வேண்டும். துர்க்கா ஸப்த ஸ்லோகி ஸ்லோகத்தால் ஸ்தோத்திரம் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹ்ரீம் - தும் - ம்

ஸர்வ ஸ்வரூபே ஸர்வேசே ஸர்வ சக்தி ஸமன்விதே
பயேப்ய : ஸ்த்ராஹி நோ தேவி துர்க்கா தேவி
நமோஸ்துதே

ம் - தும் - ஹ்ரீம்

என்ற மந்திரத்தைச் சொல்லிப் புஷ்பாஞ்சலி செய்து நமஸ்கரிக்கலாம்.

தும் - ஹ்ரீம் - ஸௌ

துர்க்கே ஸ்ம்ருதே ஹரஸி பீதிம் அசேஷஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதிம்தீவ ஷுபாம் ததாஸி
தாரித்ரிய துக்க பயஹாரிணி கா த்வதன்யா
ஸர்வோப காரகரணாய ஸதார்த்த சித்தா :

ஸௌம் - ஹ்ரீம் - தும்

என்ற மந்திரத்தைச் சொல்லித் தீபத்தைப் பிரதட்சணமாக வந்து நமஸ்கரிக்க வேண்டும். இவ்விதம் தனது சக்திக்கேற்றபடி வலம் வருபவர்கள் நலம் பெறுகிறார்கள். துக்கங்கள் போவதற்கும், சுகங்கள் வருவதற்கும் துர்க்கா தேவியை இவ்விதம் சந்தியா காலங்களில் பூஜை செய்தால் கைமேல் கனிபோல் பலன் கிடைக்கும்.

மேன்மை பொருந்திய துர்க்கா தேவியை மூன்று உலகங்களுமே பூஜிக்கின்றன. நவக்கிரகங்களில் மிக வலிமை பொருந்திய ராகு பகவான் துர்க்கையைப் பூஜிக்கிறார். துர்க்கா தேவியை இவர் பூஜை செய்து அதனால் மகிழ்ச்சியான முகத்துடன் சந்தோஷம் நிறைந்த மனத்துடன் விளங்குகின்றார்.

இதனால்தான் மங்களவார ராகு காலத்தில் துர்க்காவைப் பூஜை செய்ய வேண்டுமென்று சித்தர்கள் சொல்லுகிறார்கள்.

சக்தியில் நல்ல சக்தி, தீய சக்தி என்ற பேதம் இல்லை. எப்படிப் பயன்படுத்தப் படுகின்றதோ, அதைப் பொறுத்தே சக்தியானது நல்ல சக்தியாகவோ, தீய சக்தியாகவோ பரிணமிக்கிறது. ஆகவே தான், ஒவ்வொரு நாளுக்குரிய கிரகத்தை ராகு பிடிக்கும் நேரமான ராகு காலத்தில் பூஜை செய்வோமானால் அந்தப் பூஜைக்கு மற்ற நேரங்களில் செய்யப்படும் பூஜையைவிட, அதிக அளவு செயல் வேகம் இருக்கும்.

மங்களவார காலத்தில் துர்க்காதேவியை பல காரியங்களுக்காக பூஜை செய்யலாம். காரியங்கள் பெருமளவாக இருந்தாலும் ஒரு சில இங்கே கூறப்படுகின்றன. ராகு கிரக ப்ரீதி, செவ்வாய் தோஷ நிவர்த்தி, விவாகப் ப்ராப்தி, அரிஷ்ட நிவாரணம், சத்ருபீதி, நாசனம், ஜெயசக்திப்ரதம் இவைகள் ஒரு சிலவே.

ராகு காலத்தில் துர்க்கா தேவியை திருக்கோயில்களில் வழிபடுவது உத்தமத்தில் உத்தமம்.

எந்தச் சிவன் கோயிலிலும், துர்க்கைக்கு சந்நிதி இல்லாமல் இருப்பதில்லை. சிவலிங்கம் குடிகொண்டிருக்கும் கருவறையின் சுற்றுச் சுவர்களில், இடப்புறத்து வெளிச்சுவரில் துர்க்கையை பிரதிஷ்டை செய்ய வேண்டு மென்பது ஆகம விதிகளில் ஒன்று. இப்படி சிவாலயங்களில் சந்நிதி கொண்டிருக்கும் துர்க்கைக்கு ராகு காலத்தில் பூஜை செய்வது விசேஷ நற்பலன்களைக் கொடுக்கும்.

இயலாதவர்கள் வீட்டிலும் வழிபடலாம். அழுகாத, நசுங்காத, குத்துப்படாத, கொட்டை இல்லாத, காயாக இராத, நல்ல மஞ்சள் நிறத்துடன் கூடிய எலுமிச்சம் பழத்தைப் பிழிந்த சாற்றைத் துர்க்காதேவி சந்நதியில் அசுத்தப்படும்படி ஊற்றக் கூடாது. அந்தச் சாற்றைப் பயன்படுத் தலாம். தீபம் அழகாக எரியும்படி வைக்க வேண்டும். தீபத்திற்கு எள் எண்ணெயைப் பயன்படுத்தலாம். விளக்கேற்றப் பயன் படுத்திய எலுமிச்சம் பழத்தின் சாற்றை நாட்டுச் சர்க்கரை இட்டுப் பானகமாகக் கலந்து அதில் தேன் சற்று அதிகமாக விட்டு நன்றாகக் கலக்கி அம்பிகைக்கு நிவேதித்து அடியார்களுக்கு வழங்கித் தானும் பருகலாம்.

ராகுகால துர்க்கா பூஜையில் துர்க்கா தேவிக்கு தயிர் சாதம், வடை, பாயசம், எலுமிச்சம் பழச் சாதம் இவைகள் சிறப்புடைய நைவேத்தியங்கள்.

வசதிக்கேற்றபடி நைவேத்தியம் செய்தால் போதும். பெருமைக்காக எதையும் செய்யவேண்டியதும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகு காலத்தில் துர்க்காதேவி சன்னதியில் சுவாசினியை நமஸ்கரிக்கின்றவர்கள், க்ஷேமத்திலும் மேலான க்ஷேமத்தை அடைகிறார்கள். அங்கு சுவாசினிகளுக்குத் தாம்பூலம் தட்சிணை வழங்குகின்றவர்கள், துர்க்கா தேவியின் சன்னதியில் கன்னிப் பெண்களுக்குக் கால்களில் நலங்கிட்டு, கைகளில் வளையிட்டு, பூச்சூட்டி, புத்தாடை வழங்கி அவர்களைப் பூஜிப்பவர்கள் மற்றவர்களால் பூஜிக்கத் தகுந்த வாழ்க்கையை அடைவார்கள்.

ராகு காலத்தில் துர்க்கா தேவியை மன, மொழி, மெய்களால் துதிப்பவர்கள் உயர்ந்தவர்கள். தங்களுடைய குற்றங்களை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்திப்பவர்கள் புண்ணியவான்கள். திருக்கோவிலுக்கோ அல்லது தங்கள் வீடுகளுக்கோ சென்று பூஜிக்க இயலாத நிலையில் இருப்பவர்கள் இந்த வழியைப் பின்பற்றலாம்; அதாவது அந்த ராகு காலத்தில் துர்க்காதேவியை நினைத்து ஒரு கணம் தாங்கள் இருந்த இடத்தில் இருந்து கொண்டே ஸ்தோத்திரம் செய்தால் போதுமானது. தங்களுடைய பணிகளுக்கு இடையிலேயும் துர்க்காதேவியை மிகச் சுலபமான வழியில் இவ்விதம் துதித்து நன்மைகளை அடையலாம்.

சங்க இலக்கியங்கள் முதல் புராணங்கள் வரை துர்க்கா தேவியின் பூஜையைப் பற்றிப் பலபடக் கூறுகின்றன. மங்கள வாரத்தில், துர்க்காதேவியைப் பூஜிப்பவர்களும், மங்களவார இராகு காலத்தில் துர்க்காதேவியைப் பூஜிப்பவர்களும் சந்தோஷமான பாதையில் வெகு வேகமாக நடைபோடுகின்றார்கள்.

## சக்தி வழிபாடு

உலக நாயகியான சக்தி பல திருவுருவங்களாக காட்சி தருகிறாள். ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது நடராசப் பெருமானின் திருநடனம் எம் பெருமான் அம்பிகையின் பக்கம் நோக்கி ஆடுகிறார்.

"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்"

எனச் சேக்கிழார் சுவாமிகள் போற்றுகிறார்.

தாய்மைக்கே தனியுரிமைகொடுத்துப் பேணும் சமயம் இந்து மதம். "தாயினும் சிறந்ததொரு கோயிலும் இல்லை", "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்", "மாதா, பிதா, குரு, தெய்வம்" எனத் தாயை எல்லாவற்றிற்கும் மேலாக எண்ணிப் போற்றினார். சக்தியை ஐந்து வகையாகப் பிரித்து நோக்கலாம்.

| | | |
|---|---|---|
| போகசக்தி | – | பராசக்தி |
| வீரசக்தி | – | துர்க்கை |
| கோரசக்தி | – | காளி |
| அதிகாரசக்தி | – | நாராயணி |
| அருட்சக்தி | – | மனோன்மணி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமி

லக்ஷ்மி என்றால் கருணையோடு பார்ப்பவள் என்று அர்த்தம். சுத்த தத்துவ வடிவினளாக இருக்கும் இவள் செல்வத்திற்கு அதிபதியாகக் கருதப் படுகிறாள். இவள் சர்வ ஐஸ்வர்யங்களுக்கும் அதிதேவதை. காத்தல் தெய்வமான மகாவிஷ்ணுவின் சக்தியானவள். இடது கையில் வில்வம் பழமும், வலக் கையில் தாமரையும் கொண்டு தங்க நிறத்தோடு இரண்டு யானைகள் பொற்கலசங்களில் கங்காஜலம் கொண்டு இரு புறங்களிலும் துதிக்கையால் அபிஷேகம் செய்ய இருப்பவள். இராமவதாரத்தில் சீதையாகவும், கிருஷ்ணாவதாரத்தில் ருக்மணியாகவும், வேதவதியாகவும், சூடிக்கொடுத்தவளாகவும் அவதரித்தவள். இந்த லக்ஷ்மி தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி, மகாலக்ஷ்மி முதலிய பெயர்களோடு அட்டலக்ஷ்மியாக விளங்குபவள். நாராயணனது வாமபாகத்தில் தோன்றித் தானே இரு கூறாய் ராதை என்றும், லக்ஷ்மி என்றும் பெயரடைந்தவள்.

இவள் தனது யோகத்தால் பல உரு அடைந்து சொர்க்கத்தில் சொர்க்க லக்ஷ்மியாகவும் அரசர்களிடத்து ராஜ லக்ஷ்மியாகவும் இல்லங்களில், கிருகலக்ஷ்மியாகவும், பசுக்களில் சுரபிலக்ஷ்மியாகவும், எல்லாப் பிராணிகளிடத்திலும் சோப லக்ஷ்மியாகவும், புண்ணியவான்களிடம் பிரீதிலக்ஷ்மியாகவும், சத்திரியர்களிடம் கீர்த்திலக்ஷ்மியாகவும், வைசியர்களிடம் வர்த்தகலக்ஷ்மியாகவும், பாவிகளிடம் கலகலக்ஷ்மியாகவும், வேதாந்திகளிடம் ஞானலக்ஷ்மியாகவும், பாதாளத்தில் நாகலக்ஷ்மியாகவும், யக்ஞதேவியாகிய தக்ஷிணையாகவும், க்ஷீர சமுத்திர கன்னிகையாகவும், சூரியனிடத்தில் காந்தியாகவும், சந்திரனிடம் சந்திரிகையாகவும், மற்ற மங்கள பொருட்களிலெல்லாம் மங்கள ரூபிணியாகவும் இருப்பாள்.

ஆதி சக்தியாகிய சித்த சக்தியின் ஆதி ரூபமான ஆதிலக்ஷ்மி 72 ஆயிரம் கோடி சூரிய சக்தி கொண்ட வெண்ணிற ஜோதியானவளோடு உலகியலில் ஊடுருவல் செய்கிறாள். உலகியலுக்கு ஆதியான ஆதிலக்ஷ்மி இரண்டு கரத்தோடு கமல பீடத்தில் நேர்கு நோக்கி முகங்கொண்டு அஷ்டமங்களங்களும் கொண்டு ஆட்சி செலுத்துகிறாள். அவள் பாதங்கள் கமல இதழினைத் தொட்டு இருக்கும்.

இவளை மகாவிஷ்ணு பாற்கடலில் சித்திரை, தை, புரட்டாதி மாதங்களிலும், செவ்வாய்க் கிழமைகளிலும் பிரம்மதேவர் புரட்டாதி மாத சுக்கிலபட்சமியிலும், மனுவருஷ முடிவிலும், தைமாதச் சங்கிராந்தியிலும், மாசிமாதச் சங்கிராந்தியிலும் பூசித்ததாய்த் தேவி பகவதம் கூறும்.

பிருகுரிசிக்கு கியாதியிடத்தும், அமுதம் எடுத்தபோது, திருப்பாற்கடலிடத்தும் தோன்றியவள் இவள். ஜேஷ்டா தேவியுடன் உடன் பிறந்தவள். வைரவருக்குக் கபாலம் வைவிட்டு நீங்கப் பிச்சையிட்டவள்.

இவள், சாபத்தால் கோட்டானாகவும், அவள் இட்ட முட்டைகளில் குதிரைகள் பிறந்ததாகவும் கதையுண்டு. ஒருமுறை விஷ்ணுவிடம் இவள் இருக்கையில் வாலகில்லியர் வந்தனர். அவர்களது வரவை மதியாமல் இவள் நகைத்ததால் விஷ்ணுமூர்த்தியால் குலக் கேடியாக அகும்படி சாபமேற்ற தாகத் திருப்பூவணபுராணம் கூறும். வராக கற்பத்தில் நக்ஷசித்தின் குமாரியாய்ப் பிறந்து விஷ்ணுவை மணந்தாள்.

இரவிவர்மனுக்கு அமுதபதி வயிற்றில் தாரை, வீரை என்பவளின் தங்கையாய்ப் பிறந்து, இராகுலனுடைய மனைவியாகிக் கணவனுடன் உடன் கட்டை ஏறித் தாதுச் சக்கரன் எனும் முனிவனுக்கு உணவளித்த புண்ணியத்தால் மணிமேகலையாக வந்து இவள் பௌத்த தர்மம் கேட்டதாய் மணிமேகலை கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லஷ்மிதேவி பாற்கடலில் தோன்றிய வரலாறு :**

தேவர் உலகின் அரசனான இந்திரன் ஒரு சமயம் செருக்கின் காரணமாய் துர்வாச மகரிஷி தனக்களித்த விஷ்ணுப் பிரசாதமான பாரிஜாத மலரை அலட்சியம் செய்து ஐராவதம் எனும் தன் யானையிடம் அளிக்க அது அப்பூவைத் தன் காலால் நசித்துத் தேய்த்தது. கோபம் கொண்ட துர்வாச முனிவர் "செல்வத் திருமகள் ஆன லக்ஷ்மிதேவி உன்னைவிட்டு நீங்குவாளாக" எனச் சபித்தார். தரித்திரமுற்ற இந்திரன் குல குருவாகிய பிரகஸ்பதியின் ஆலோசனையால் விஷ்ணு பகவானைத் தரிசித்து அவர் வாக்குப்படி பாற்கடலைக் கடைந்தபோது அப்பாற்கடலினின்றும் மகாலக்ஷ்மி தோன்றினாள். அப்போது அந்தப் பாற்கடலில் இருந்து உச்சிரவசு என்ற குதிரையும், ஐராவதம் எனும் யானையும் உடன் தோன்றின. அவ்வாறு தோன்றிய மகாலக்ஷ்மியைத் தொழுது இந்திரன் மீண்டும் செல்வம் பெற்றான். இது பிரம்ம வைவர்த்த புராணத்தில் உள்ள கதை.

**லக்ஷ்மி அவதரித்த வரலாறு :**

பிரம்மாவின் புத்திரனான பிருகு முனிவர் ஒரு சமயம் பிரம்மா, சிவன், விஷ்ணு எனப்படும் மும்மூர்த்திகளில் சிறந்தவர் யார் என்ற விவாதம் எழுந்த போது, அதன் முடிவு காண மும்மூர்த்திகள் வாழும் இடங்களுக்குச் சென்றார். பிரம்மனின் சத்திய லோகத்திலும், சிவனின் கயிலாயத்திலும் அவருக்கு அவமரியாதை நேரக் கோபத்துடன் வைகுந்தம் சென்ற முனிவர் அங்கு விஷ்ணு பகவான் தன்னைக் கவனியாது இருப்பது கண்டு கோபமுற்று விஷ்ணுவின் மார்பில் எட்டி உதைத்தார். விஷ்ணு பகவான் கோபம் கொள்ளாமல் அன்போடு உபசரிக்க, அவரின் அன்பு உள்ளம் உணர்ந்து இவரே சத்வகுண இறை எனத் தீர்ப்பளித்தார். மகாவிஷ்ணுவின் நெஞ்சில் முனிவர் உதைத்தது கண்டு கோபமுற்ற மகாலக்ஷ்மி தவம் செய்யப் பூவுலகம் அடைந்தாள். வருந்திய முனிவர் லக்ஷ்மியின் இருப்பிடமான திருமாலின் மார்பில் உதைத்தற்குப் பதிலாக அவள் தனக்கு மகளாகப் பிறந்து தன் மார்பில் எட்டி உதைத்து விளையாட வேண்டும் எனத் தவம் இயற்றி லக்ஷ்மிதேவியிடம் வரம் பெற்று அவளை மகளாய் அடைந்தார். பார்கவி என்னும் பெயரில் அவர் மகளாய் சிறிது காலம் இருந்தபின் மீண்டும் திருமாலின் மார்பை லக்ஷ்மி அடைந்தனள். இது பிரமாண்ட புராணத்தில் உள்ள வரலாறு.

**அக்கினியில் இருந்து லக்ஷ்மி தோன்றிய வரலாறு :**

முன்னொரு காலத்தில் தன்நாட்டை தர்மத்தோடு ஆண்டு வந்த பத்மாஷன் என்ற அரசன் லக்ஷ்மியைத் தன் மகளாக அடைய வேண்டும் என விரும்பி அவளை நோக்கிக் கடுந்தவம் செய்தனன். தவத்தின் பயனாய்த் தோன்றிய லக்ஷ்மி அவன் விருப்பம் நிறைவேற மகாலக்ஷ்மியை நோக்கித் தவம் செய்யுமாறு கூற, அவ்வாறே அவன் செய்த தவத்தால் விஷ்ணுபகவான் தோன்றி லக்ஷ்மியை மகளாய்ப்பெற வரமருளினார். விஷ்ணு பகவான் தனக்களித்த மாதுளங் கனியுடன் அரண்மனை அடையமுன் அம்மாதுளம் கனி பெரிதாய் வளர்ந்தது. அம்மாதுளங் கனியைப் பிளக்க ஒரு பக்கத்தில் முத்துக்களும், மறுபக்கத்தில் ஒரு பெண் குழந்தையும் இருக்கக் கண்டு மகிழ்ந்தான். அக்குழந்தையைப் பத்மை எனப் பெயரிட்டுத் தன் அன்பு மகளாய் வளர்த்து பருவமெய்தியதும் சுயம்வரம் நடத்த முனைந்தனன். சுயம்வரத்திற்கு வந்த மன்னர்களை நோக்கி வானத்தில் காணப்படும் நீல நிறத்தை தன் மேனியில் பூசுபவர்களுக்கே தன் மகள் மாலையிடு வாள். என்று அறிவிக்கக் கோபம் கொண்டு வந்த மன்னர்கள் அவனுடன் போர் தொடுத்தனர். அப்போரில் அரக்கர்களால் பத்மாஷன் மாண்டான். தந்தை மாண்டதும் அரக்கருக்கு அஞ்சி யாக குண்ட நெருப்பில் பத்மை இறங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக குண்ட நெருப்பால் அவளை ஒன்றும் செய்ய முடியவில்லை. யாக குண்டத்தி லிருந்து வெளிவந்த பத்மை போரில் இறந்தவர்களுக்காக வருந்தித் தவம் செய்யத் தொடங்கினாள். இவ்வளவும் அவள் தவம் செய்தபோது இராவணன் அவளைக் காமுற, அவனிடமிருந்து தப்புதவற்காக மீண்டும் அக்கினி குண்டத்தில் இறங்கினள். இராவணன் தீயைக் கிளறிப் பார்த்தபோது ஐந்து இரத்தினங்கள் கிடைத்தன. அவ்விரத்தினங்களை ஓர் பேழையில் வைத்து தன் பூஜையறையில் வைக்கச் சில நாட்களின்பின் ஓர் பெண் குழந்தை அப்பெட்டியிலிருந்து தோன்றிற்று. அக்குழந்தையால் தனக்கு ஆபத்து என்று உணர்ந்து பெட்டியாடு அக்குழந்தையை வெகு தொலைவில் உள்ள மிதிலா நகரித் புதைக்க அக்குழந்தையே ஜனகராஜாவிற்கு மகளாய்க்கிடைத்து ஜானகியாய் வளர்ந்து இராவணன் அழிவுக்குக் காரணமாகினா ளாம். இது ஆனந்த இராமாயணத்தில் உள்ள வரலாறு.

**குதிரையாய் ஆன மகாலக்ஷ்மி :**

ஒரு முறை சூரியனின் மகனான ரேவந்தன் என்பான் உச்சிரவ என்ற குதிரை மீது ஏறிக்கொண்டு வைகுண்டம் சென்றான். தன்னோடு பாற்கடலிற் பிறந்த அக்குதிரையின் அழகை மகாலக்ஷ்மி இரசிக்கத் தொடங்கினாள். அப்போது திருமால் கேட்ட கேள்விகள் அவ் காதில் விழாததால் கோபம் கொண்ட திருமால் அவளைப் பெண் குதிரை ஆகும்படியும் இனிமேல் நீ எல்லாவிடத்தும் ரமிக்கும் தன்மை அடையப் போவதால் ரமை என்றும், எல்லாவிடத்திலும் சஞ்சரிக்கப் போவதால் சஞ்சலை என்றும் பெயர் பெறுவாய் எனவும் சபித்துவிட, அச்சாபத்தின்படி அன்னை லக்ஷ்மி பூலோகத்தில் ஓர் காட்டில் பெண் குதிரையாய் வடிவமெடுத்துச் சிவனை நோக்கித் தவம் செய்ய, சிவபெருமான் நாராயணனே ஓர் ஆண் குதிரையாய் ஆகி உன்னுடன் கூட அதன் பயனாய் ஏக வீரன் எனும் உலகப் பெயர்பெறும் புத்திரனைப் பெற்று சக்தியை வழிபட்டு மீண்டும் மகாவிஷ்ணுவை அடைவாய் என வரமளிக்க அவ்வண்ணமே மீண்டும் அன்னை வைகுண்டம் அடைந்தனள். இது தேவிபகவதம் கூறும் வரலாறு.

**மானாய் ஆன மகாலக்ஷ்மி :**

ஒரு சமயத்தில் கண்ணுவ முனிவ சாபத்தால் மானின் வடிவடைந்து வனத்தில் அலைந்து கணவனைத் தேடுகையில் அவ்வனத்தில் தவம் புரிந்த திருமாலைக் கண்டு மனம் களித்துக் கருவுற்று ஒரு பெண்ணைப் பெற்று, பின் வேடரைக் கண்டு மறைந்தனளாம். இது திருவொத்தூர் புராணம் கூறும் வரலாறு.


உங்கள் சஞ்சிகை "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோயில் வீதி,
நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டலக்ஷ்மி

**ஸ்ரீ ஆதி லக்ஷ்மி :**

மங்கலங்களுக்கெல்லாம் அதிபதியான ஆதிலக்ஷ்மி தன் பாதங்களுக்குக் கீழ் பூர்ணகும்பம், கண்ணாடி, சாமரம், துஜம், ஸ்ரீஷபம், பேரிகை, திருவிளக்கு, ஸ்வஸ்திக் ஆகியவைகளடங்கிய அபூர்வ மங்கள அம்சங்களுடன் காட்சி தருகிறாள்.

ஆதிலக்ஷ்மியின் பொற்பாதங்கள் பற்றியோருக்குச் சர்வ மங்களமே என உணர்த்தும் எட்டுச் சின்னங்கள் தன் பாதத்தின் கீழ் அமைத்துக் காட்டி திருச் சேவை சாதிக்கும் எட்டு லட்சுமிகளிலும் முதல் லட்சுமியான ஆதிலக்ஷ்மியை அனைத்து நாட்களிலும் குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் அர்ச்சனை செய்தும், அபிஷேகம் செய்தும் வழிபடு வோருக்கு அனைத்து மங்களங்களும் வந்து சேரும்.

**ஸ்ரீ தான்ய லக்ஷ்மி :**

அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ ஜீவாதாரமான தான்யங்கள், காய்கள், கனிகள் மற்றும் அனைத்து உணவுப் பொருட்களையும் அளிப்பவள் ஸ்ரீதான்ய லட்சுமி. மனித உயிர்களின் பசியைப் போக்குபவள். உடலுக்குள் பசியை உருவாக்கி உண்ண வைப்பவளும் அவளே.

அறுசுவைக்கும் நாயகி எனப்படும் தான்ய லட்சுமி ஆறு திருக்கரங்களுடன் அருள் தருகிறாள். வலது கரங்களில் அபய ஹஸ்தம், தான்யம், அம்பு, இடது கரங்களில் வில், கரும்பு, வரத ஹஸ்தம் தாங்கியவள், யானையைப் பீடமாகக் கொண்டு மேற்குத் திசை பார்த்து வீற்றிருக்கிறாள். படியளந்து காக்கும் பரம்பொருளுக்கு அவளே கரம். காமதேனு அமுதமாவாள். அமுதமானவளை, அருளானவளை, அன்னையானவளை, அன்னமானவளைத் தொழுது வழிபட்டால் பல தலை முறைகளுக்குப் பசிபிணி நெருங்காது.

**ஸ்ரீதைர்ய லக்ஷ்மி :**

எட்டுத் திருக்கரங்களுடன் வலது கரங்களில் அபயஹஸ்தம், சூலம், அம்பு, சக்கரம், இடது கரங்களில் வரத ஹஸ்தம், கபாலம், வில், சங்கம் இவற்றை ஏந்திய எட்டுக் கரங்களுடன் வீற்றிருக்கும் ஸ்ரீதைர்ய லட்சுமி தன்னை வந்தடைந் தவர்களுக்கு எல்லா விதமான மனோ திடத்தையும், தைரியத்தையும் அருளுவதுடன் அவர்களின் வாழ்வில் வளமாக, பக்க பலமாக நின்று பாதுகாப்பாள்.

**ஸ்ரீ கஜ லக்ஷ்மி :**

இவளின் மறுபெயர் ஸ்ரீராஜலட்சுமி. இருபுறமும் யானைகள் கலசம் ஏந்தி அபிஷேகம் செய்வது போன்று எழுந்தருளி யிருப்பதைக் காணலாம். நீருண்ட மேகங்கள் நிலமகள் மீது மழை பொழிவதை ஸ்ரீகஜலட்சுமியின் தோற்றம் குறித்து நிற்பதாகக் கூறுபவர். பொன், புகழ் இவற்றுடன் கூடிய பெருமையைத் தரும் வாழ்வைத் தருபவள் ஸ்ரீ கஜலட்சுமியே. அனைத்துச் செல்வங்களுக்கும் ஆதாரமான மழையைப் பொழியச் செய்து பூமியை வளத்தோடும், செழிப்போடும் ஆக்குபவள் கஜலட்சுமியே.

**ஸ்ரீசந்தான லக்ஷ்மி :**

எல்லாவிதச் செல்வத்தைவிட சிறந்தது என கூறப்படும் மக்கட் செல்வத்தைத் தருபவள் ஸ்ரீசந்தான லட்சுமி.

ஜடையையும், கிரீடத்தையும் தரித்த வளும், வரத, அபய ஹஸ்தங்கள் கொண்டவளும், குழந்தையைக் கையில் ஏந்தியும், ஆபரணங்களை அணிந்து, கன்னிகா பீடத்தில் அமர்ந்து கருணை நிரம்பியவளாக வீற்றிருக்கும் கோலத்தில் அருள்தரும் ஸ்ரீசந்தான லட்சுமியை வணங்கினால் குழந்தைப் பேறு கிட்டும். பிள்ளைப் பாக்கியமே பித்ருகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைத்தேற்றும் என்பது இந்துக்களின் கோட்பாடு ஆகும். ஆண்டு பலவாகக் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் தொடர்ந்து ஸ்ரீசந்தானலக்ஷ்மியை பூஜித்து வந்தால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும் என்பது திண்ணம்.

**ஸ்ரீவிஜயலக்ஷ்மி :**

தூய எண்ணத்தில் நிறைந்து வெற்றி அருள்பவள் ஸ்ரீவிஜய லக்ஷ்மி. மும்மூர்த்திகளின் தெய்வீகச் செயல்களில் அவர்களின் முத்தொழில்களில் மூவுலகமாந்தர்களின் முயற்சிகளில் ஊக்கமாவும் வெற்றி தந்து முழுமை கண்டு நிற்பவள் ஸ்ரீவிஜயலக்ஷ்மி. எட்டாத கனவுகளை எட்ட வைக்கும் வெற்றி நாயகியான ஸ்ரீவிஜயலக்ஷ்மி எட்டுக் கரங்களுடன் அம்ச வாகனத்தில் வீற்றிருக்கிறாள்.

இத்தேவியை பூஜித்தால் சகல நன்மைகளும், எடுத்த காரிய வெற்றியும் உண்டாகும்.

**ஸ்ரீவித்யா லக்ஷ்மி :**

கலைமகளையும், அலைமகளையும் இணைத்து வீற்றிருப்பவள் ஸ்ரீவித்யா லக்ஷ்மி. இவள் கல்வியையும் அதன் வழியே செல்வமும் அளிப்பவள். மிகவும் மென்மையான உருவத்துடன் சங்கு, பத்ம, அபய, வரத ஹஸ்தங்களுடன் அவையிட்டத்தில் அமர்ந்து இருக்கக்கூடியவளும், நாத சொருபமான பகவானின் சக்தி உருவானவளும் ஸ்ரீவித்யாலக்ஷ்மியே எனப் போற்றப்படுகிறாள்.

இத்தேவியின் திருவருளால்தான் நான்கு வேதங்களும், சாஸ்திரங்களும், அறுபத்தி நான்கு கலைகளும் இப்புண்ய பாரதத் திருநாட்டில் செழித்தோங்கி வளர்ந்து வருகின்றது.

**ஸ்ரீ தன லட்சுமி :**

"சங்க, பத்ம நிதிகளை வைத்திருக்கும் தேவி" என்று ஸ்ரீதனலக்ஷ்மியைப் போற்றுகின்றது ஸ்ரீப்ரஸந்த ஸம்ஹிதை. தங்க நிறமுடையவள், சகலவித சௌகாரியங்களை அருள்பவள். பத்மாசனத்தில் வீற்றிருப்பவள். சக்கரம், அம்பு, வெற்றிலை, சங்கு, வில், அமிருத கலசம் இவற்றுடன் அருள் தருபவள். சீனிவாசப் பெருமானுக்கு குபேரன் கடன் அளிக்க முடிந்தது என்றால் அதற்கு ஸ்ரீதனலக்ஷ்மியின் திருவருளே காரணம். ஸ்ரீதனலட்சுமியை வெள்ளிக் கிழமைகளில் சகஸ்ரநாம அர்ச்சனை, திருமஞ்சனம் ஆகியவற்றால் பூஜித்து அர்ச்சித்தால், எல்லாவிதச் செல்வங்களும் பொன், பொருள், யாவும் தாமே வந்தடையும் என்பது திண்ணம்.

## பலி பீடம்

பலிபீடம் ஆன்மாக்களின் ஆணவ மலங்களை அழித்துப் பக்குவப்படுத்தி புனிதப்படுத்துகின்றது. பத்திரப்படுத்துவதால் அதற்குப் பத்திரலிங்கம் என்று பெயர்.

சிவாலயங்களில் நந்தி தேவருக்கு பின்னுள்ள பலிபீடம் பிரதான பலிபீடமாகும். இவை பொதுவாக ஆலயத்தின் பிரதான மூர்த்தியின் பாதங்களைத் தாங்கியதாக தாமரை வடிவில் இருக்கும். பலிபீடத்தின் அருகே சென்று நம்மிடமுள்ள காம, குரோத, லோப, மோக,மத, மாத்சர்யங்களைப் பலி கொடுத்ததாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அஹங்காரம், மமகாரம் பலியிடப்பட்ட பின்னரே தெய்வ தரிசனத்தைப் பெறவேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தை இது சுட்டிக் காட்டுகிறது.

சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசத்தில் பலிபீடம் பாசத்தை உணர்த்துகிறது. மிகப் பெரிய சிவாலயங்களிலே எட்டுத்திக்கிற்கும் பலிபீடம் அமைத்து வழிபடுவதை இன்றும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி

இவள் பிரமனால் உருவாக்கப்பட்டுப் பின் அவனாலேயே மணக்கப்பட்டவள். கல்வியின் அதிதேவதை, இவள் வெள்ளை நிறமானவள், வெள்ளை நிற வஸ்திரம், கைகளில் ஜபமாலை, புத்தகம், வீணை, எழுத்தாணி தரித்து எழுந்தருளியிருப்பவள். இவளுக்குப் பிரம்ம வித்தை முகமாகவும், நான்கு வேதமும் கரங்களாகவும், எண்ணும் எழுத்தும் இதிகாசங்கள் பாதங்களாகவும், ஓங்காரம் யாழாகவும் திகழ்கின்றன.

தன்னைச் சிருஷ்டித்த பிரமனே தன்னைக் கூட வருவது கண்டு மான் வடிவோடு அஞ்சியோடப் பிரமனும் ஆண் மானுருக் கொண்டு துரத்திய தாகவும் பின் சிவன் கருணையால் பிரமனையே கணவனாய்ப் பெற்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

பிரம்மன் தன்னை நீக்கி யாகம் செய்ததால் சரஸ்வதி எனும் பெயரிலான நதியாகிப் பிரமனின் யாகத்தை அழிக்க வந்தவள்.

தன் நாயகனான பிரமனோடு கங்கையில் குளிக்கச் சென்றபோது ஓர் கந்தர்வன் பாடல் கேட்டுச் சரஸ்வதி தாமதிக்க, அவளை விட்டுச் சென்ற பிரம்மன் மற்றைய தேவியரோடு குளித்தது கண்டு இவள் கோபிக்க, உன் குற்றமுணராது கோபித்ததால் அட்சர வடிவாகிய நீ பூவுலகத்தில் நாற்பத்தெட்டுப் புலவ ருருவாகத் தோன்றிச் சிவனைப் பணிந்து அவன் தரும் சங்கப் பலகையில் இருந்து வருக எனச் சபித்த அச்சாபமேற்று நடந்தவள்.

ஒரு யாகத்தில் இவள் வரத் தாமதித்ததால் பிரமன் இடைக்குலக் கன்னிகை ஒருத்தியைத் தாரமாகப் பெற்றனன். அதனால் கோபங் கொண்டு தேவரை இவள் சபித்ததாய் வரலாறு.

ஒருமுறை இவளும் இலட்சுமியும் தம்முள் மாறு கொண்டு தங்களில் உயர்ந் தவள் யார் என்று பிரமனைக் கேட்கப் பிரமன் இலட்சுமியே என்றதனால் நதியாய் இவள் உருவெடுத்தனளாம்.

பிரமன் யாகம் செய்ய அந்த யாக கலசத்துள் தோன்றியவள். புலத்திய முனிவரை அரக்கனாகும்படி சபித்தவள். சரத்காலத்தில் பூஜிக்கப்படுவதால் சாரதை எனவும் பெயர் கொண்டவள்.

தன்னைப் படைத்த பிரமன் மோகித்துக் கூறிய வார்த்தைகளால் கோபங் கொண்டு அங்ஙனம் மோக வார்த்தைகளைக் கூறிய பிரம்மனின் ஐந்து முகங்களுள் ஒன்றினைச் சிவனை நீ பூசித்து அவனால் அறுபடுவாய் எனச் சாபமிட்டவள். இவை அனைத்தும் சிவ மகாபுராணம் சொல்லும் செய்திகள்.

இவளும் கங்கை, லக்ஷ்மி முதலியவர் களும் விஷ்ணு பத்தினிகள். ஒரு கால் விஷ்ணு கங்கையிடம் அதிக ஆசை கொண்டு அவளுடன் நகை முகமாயிருத் தலைக் கண்ட சரஸ்வதி, பொறாமை கொண்டு லக்ஷ்மியை நோக்க லக்ஷ்மி கங்கைக்குச் சார்பாயிருத்தலைக் கண்டு இவள் லக்ஷ்மியைச் சேடியாகவும் நதியாகவும் போகச் சபித்தாள். கங்கை சரஸ்வதி நதியுருவமாகவெனச் சபித்தாள். பின் ஸரஸ்வதி கங்கையை நோக்கி நீயும் நதியுருவமாய் உலகத்தவரது பாவத்தைச் சுமக்க என்றனள். லக்ஷ்மி இதனால் தர்மத்வஜருக்குக் குமரியாகித் துளசியாகவும் பத்மாவதியெனும் நதியாகவும் பிரவகித்தாள். இலக்ஷ்மி சங்கசூடனை மணந்தனள். கங்கை சந்தனுவை மணந்தனள். சரஸ்வதி பிரமபத்தினி ஆயினள். சரஸ்வதி பாரதவருஷத்தில் நதியாக வந்தபடியால் பாரதியென்றும், பிரமனுக்குப் பத்தினியாதலால் பிரம்மி என்றும், வாக்குகளுக்குத் தேவியாதலால் வாணி என்றும், அக்கினி யைப்போல் பாவத்தைக் கொளுத்தி யாவருங்காண மஞ்சணிறம் பெற்றிருத் தலின் சரஸ்வதி என்றும் அழைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றனள். இந்த மூன்று தேவியரும் பூலோகத்தில கலி வருஷம் ஐயாயிரம் சென்றபின் தங்கள் பதமடைவர் என்று தேவி பாகவதத்தில் கூறப்படுகின்றது.

**மகாசரஸ்வதி :**

மகாசரஸ்வதியின்சரிதம் மார்க்கண்டேய புராணத்தைச் சேர்ந்த தேவி மகாத்மியத் திலே விரிவாகக் கூறப்பெற்றிருக்கிறது. சும்ப நிசும்பர்களால் வருத்தமுற்ற தேவர்கள் வேண்டப் பார்வதியின் கோசத்திலிருந்தும் வெளிவந்த காரணத்தினால் கௌசிகி என்று அழைக்கப்படுகிறாள். மணி, சூலம், ஏறு, சங்கம், உலக்கை, சக்கரம், வில், அம்பு இவற்றைக் கரங்களில் தரிப்பவள். "க்லீம்" பீஜரூபிணி.

மேகத்திலிருந்து வெளிவரும் சந்திரனைப் போன்ற ஒளியினள் . தன் இசையால் சும்பநிசும்பர்களைக் கவர்ந்து தன்னை அடைவதற்காகப் போரிடச் செய்தவள். தன் ஓங்கார சத்தத்தினால் தூம்ரலோசனை பஸ்பமாக்கியவள்.

**பிரம்மசக்தி சரஸ்வதி :**

வித்தைகளின் அதிதேவதையான சரஸ்வதி தேவி பிரம்மனின் சக்தியாவாள். இந்தச் சரஸ்வதி பற்றித் தேவி மகாத்மியம் ப்ராதானி கரஹஸ்யத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதி சக்தி முழுமையான சத்வகுணம் கொண்டு சரஸ்வதியின் ரூபம் பெற்றவளாம். அக்கமாலை, அங்குசம், வீணை, புத்தகம் ஏந்திய நான்கு கரங்களுடன் விளங்குபவள் இவள். மகாவித்யா, மகாவாணி, பாரதி, வாக்சரஸ்வதி, ஆரியா, ப்ராம்ஹீ, காமதேனு, பீஜகர்பதீஸ்வரி எனப் பல பெயர் கொண்டவள் இவள்.

கவிதை, சாஸ்திரம், கலை, சங்கீதம் போன்ற அனைத்தையும் அளிப்பவள். சப்த பிரபஞ்சத்தின் ஆதாரமாய் உள்ளவள். 51 அட்சரரூபிணியாகவும் விளங்குகின்றாள்.

**உபய பாரதி :**
**(பூமியில் அன்னை சரஸ்வதியின் அவதாரம்)**

ஒரு சமயம் சத்யலோகத்தில் பிரம்ம தேவருடைய சந்நிதியில் முனிவர்கள் ஒன்று கூடி அவரவர் அத்யயனம் செய்த வேதப் பகுதிகளைக் கூறிப் பிரம்ம தேவரை மகிழ்வித்தனர். அப்போது கோபத்தின் உருவமான துர்வாச மகரிசி தானும் வேதத்தைக் கூறினார். அப்போது ஓரிடத்தில் ஸ்வரம் தவறியது. இதைக் கண்டு பக்கத்திலிருந்த சரஸ்வதி தேவி சிரித்தாள். அதனால் கோபமுற்ற துர்வாசர் "சரஸ்வதி நீ மனுஷியாகப் பிறப்பாய் எனச் சாபமிட்டார்" அச்சாபத்தின் காரணமாக அன்னை சரஸ்வதி பூலோகத்தில் அவதரித்தாள். இவள் ஹிமமித்திரரின் புத்திரனான விச்வரூபரை (மண்டன மிச்சரை) மணந்தாள். இவளே மண்டனமிச்சருக்கும், சங்கரபகவத் பாதருக்கும் நடந்த வாதத்தில் சாட்சியாக வரிக்கப்பட்டாள். மண்டனர் சங்கரரிடம் தோற்றுப் போனபின் இவள் தன்னையும் சங்கரர் ஜெயித்தால் தான் மண்டனரை ஜெயித்ததாக உபய பாரதியுடனும் வாதிட இசைந்தார்.

பதினேழு தினங்கள் நடந்த வாதத்தில் இவள் காமசாஸ்திரத்தை வாதிட முனைய, சங்கரர் அவ்விடயத்தை வாதிடத் தனக்கு ஒருமாத காலம் அவகாசம் கேட்டுப் பெற்று அமருமகன் எனும் அரசனின் சரீரத்தில் புகுந்து பின் அவளுடன் வாதிட வந்தார்.

அவளைக் கண்டு நீங்கள் சதாசிவன் எனக்கூறிப் பாரதி மறையச் சங்கரர் அவளை யோக சக்தியினால் கண்டு தாயே! சரஸ்வதி தேவியே ஆன தாங்கள் நான் ஏற்படுத்தும் சிருங்கேரியில் சாரதா எனும் பெயருடனும், காஞ்சியில் காமகோடி எனும் பெயருடனும் சாந்நித்தியம் பெறவேண்டு மெனப் பெயர் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரஸ்வதியின் அருள் பெற்ற அடியார் :**

ஊமைப் பிள்ளையாகப் பிறந்து முருகன் அருளால் அரியவரம் பெற்றுப் பல அருள் நூல்களை இயற்றிய ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் காசியில் வசித்த முஸ்லிம் மன்னரை நேரில் சந்தித்து அளவளாவி, இந்து சமுதாயத்தை நிலைநிறுத்த விரும்பி வட இந்திய பாஷைகளைக் கற்கக் கருதினார். அன்னை சரஸ்வதியைப் போற்றிச் சகலாகலாவல்லி மாலையை இவர் பாட, அம்மொழிகள் இவருக்கு இயல்பாயின. அதனால் அம்மன்னனிடம் பேசிக் காசியில் ஒரு மடத்தினை ஸ்தாபித்தார்.

**தேவி பாகவத்தில் சரஸ்வதி :**

மூலப் பிரகிருதியான பராசக்தியிட மிருந்து தோன்றிய ஐந்து பிரதான சக்திகளில் சரஸ்வதியும் ஒருவள் எனவும், அம்மூலப் பிரகிருதியில் இருந்து தோன்றிய ராதா தேவியின் சக்தியின் நாக்கு நுனியிலிருந்து வெண்ணிறம் கொண்டவளும் வெண்ணாடை தரித்தவளுமான இச் சரஸ்வதி தோன்றினாள் எனவும், இவள் படைத்தற் கடவுளான பிரம்மனுக்குச் சக்தியாகக் கொடுக்கப்பட்டாள் எனத் தேவிபாகவதம் கூறுகின்றது.

## அன்னை சரஸ்வதி அருளும் அறுபத்து நான்கு கலைகள்

1. அக்கர இலக்கணம்
2. இலிகிதம்
3. கணிதம்
4. வேதம்
5. புராணம்
6. வியாகரணம்
7. நீதி சாஸ்திரம்
8. சோதிட சாஸ்திரம்
9. தரும சாஸ்திரம்
10. யோக சாஸ்திரம்
11. மந்திர சாஸ்திரம்
12. சகுன சாஸ்திரம்
13. சிற்ப சாஸ்திரம்
14. வைத்திய சாஸ்திரம்
15. உருவ சாஸ்திரம்
16. இதிகாசம்
17. காவியம்
18. அலங்காரம்
19. மதுரபாடனம்
20. நாடகம்
21. நிருத்தம்
22. சக்தபிரமம்
23. வீணை
24. வேனு
25. மிருதங்கம்
26. தாளம்
27. அத்திர பரீஷை
28. கனக பரீஷை
29. இரத பரீஷை
30. கஜ பரீஷை
31. அசுவ பரீஷை
32. இரத்தின பரீஷை
33. பூபரீஷை
34. சங்கிராம இலக்கணம்
35. மல்யுத்தம்
36. ஆகருஷணம்
37. உச்சாடனம்
38. வித்துவேஷணம்
39. மதன சாஸ்திரம்
40. மோகனம்
41. வசீகரணம்
42. இரசவாதம்
43. காந்தர்வவாதம்
44. பைபீலவாகம்
45. கௌத்துகவாதம்
46. தாது வாதம்
47. காருடம்
48. நாட்டம்
49. முட்டி
50. ஆகாயப்பிரவேசம்
51. ஆகாயமனம்
52. பாகாயப் பிரவேசம்
53. அதிரிச்சயம்
54. இந்திர ஜாலம்
55. மகேந்திர ஜாலம்
56. அக்கினித்தம்பம்
57. ஜலஸ்தம்பம்
58. வாயுத் தம்பம்
59. திட்டித் தம்பம்
60. வாக்குத் தம்பம்
61. சுக்கிலத் தம்பம்
62. கன்னத்தம்பம்
63. கட்கத்தம்பம்
64. அவத்தைப் பிரயோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**தெல்லிப்பழை சுந்தரமூர்த்தி ஆசிரியருக்கு நூறு வயது நிறைவு :**

- தெல்லிப்பழையைச் சேர்ந்த முன்னாள் மகாஜனாக் கல்லூரி ஆசிரியரும், தெல்லிப்பழை குருநாதசுவாமி கோவில் திருத்தொண்டரும், சிறந்த சைவசமய அறிஞருமான ஸ்ரீமான் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி உபாத்தியாயர் அவர்களின் நூறாவது பிறந்ததினம் 23-09-2009 அன்று யாமாவளவு இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சைவ ஆர்வலர்கள், மாணவர்கள், உறவினர்கள் பலரும்கூடி அவரை வாழ்த்தினர். ஆசிரியர் நூறு வயதிலும் மிகவும் ஆரோக்கியமாக அனைவரையும் ஆசீர்வதித்து மகிழ்ந்தார்.

**இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய அறநெறிப் பாடசாலைக்கான நவராத்திரி விழா :**

- 27-09-2009 ஞாயிறு அன்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் மேற்படி விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது. திணைக்கள உத்தியோகத்தர் திரு. த. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், கோப்பாய் சிவம், திரு. பா. இராஜகோபாலன் (நிர்வாக அலுவலர், தெல்லிப்பழை பிரதேச செயலகம்) உட்பட பலரும் உரையாற்றினர். துர்க்காதேவி அறநெறிப் பாடசாலை உட்பட பல அறநெறிப் பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**அளவெட்டி மகாஜனசபை மண்டபம் திருமண மண்டபமாக நிர்மாணம் :**

- அளவெட்டிக் கிராமத்தில் உள்ள மகாஜனசபை மண்டபம் திருமண வைபவங்கள் நடாத்தும் வகையில் மாற்றம் செய்யப்பட்டு சமீபத்தில் மீளவும் திறக்கப்பட்டுள்ளது. மாதம் தோறும் பௌர்ணமி நிகழ்ச்சிகள் மேற்படி மண்டபத்தில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

**ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் யாழ். வருகை :**

- அமெரிக்கா ஹவாய் ஆதீனகர்த்தா சுப்பிரமுனி சுவாமிகளின் சீடரும் ஆன்மீகத் துறவியுமான ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் 21-04-2009 யாழ் வந்துள்ளார். பல்வேறு சமய வைபவங்களில் கலந்து கொள்ளும் சுவாமிகள் அடுத்தமாத முற்பகுதியில் அமெரிக்கா செல்லவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவபூமி அறக்கட்டளைக்கு 300 பரப்பு நிலம் அன்பளிப்பு :**

※ சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் நடாத்தும் சிவபூமி முதியோர் இல்லம், சிவபூமி பாடசாலை ஆகியவற்றின் பயன்பாட்டுக்காகவும் எதிர்கால கல்வித் தொண்டுக்காகவும் 300 பரப்பு நிலம் சுழிபுரத்தில் கொள்வனவு செய்யப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிணறு, புலநூறு பனைமரங்களையும் கொண்ட இந்நிலம் எதிர்காலத்தில் புதிய பயன்பாட்டுடைய அறிவாலயமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுவருகிறது.

**கவிஞர் முருகையா அவர்களுக்கு நினைவு அஞ்சலி :**

※ புகழ்பூத்த ஈழத்துக் கவிஞனும் தமிழ் அறிஞருமான முருகையன் சமீபத்தில் கொழும்பில் காலமானார். தென்மராட்சி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்வி, கலை, இலக்கிய உலகால் நன்கு மதிக்கப்பட்டவர். அன்னாரது பிரிவு குறித்து கொழும்பிலும், நீர்வேலி, இணுவில், சாவகச்சேரி, நல்லூர் ஆகிய இடங்களிலும் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டது.

**காரைநகர் பரோபகாரி திரு. K. K. சுப்பிரமணியம் அவர்களின் எண்பதாவது பிறந்ததினம் :**
**(முன்னாள் சுங்கத் திணைக்கள உயர் அதிகாரி)**

※ சிறந்த சமய சமூகப் பணியாளரும் கொழும்பு நகரில் சமய வைபவங்களை முதன்மைப் படுத்திய பண்பாளரும் சுங்கத் திணைக்களத்தில் நீண்ட காலம் உயர் பதவி வகித்தவருமான K. K. சுப்பிரமணியம் அவர்களின் 80ஆவது பிறந்த தினம் சமீபத்தில் இந்தியாவில் நடைபெற்றது. அன்னாரது குடும்பத்தவர்கள், அன்பர்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாமில் வசித்து யாழ் திரும்பிய 95 கற்பிணிப் பெண்கள் குடும்பம் 366 பேர் 05.10.2009 இரவு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். தேவஸ்தானம் அவர்களை உபசரித்து உணவு வழங்கி மறுநாள் அவர்தம் இருப்பிடங்களுக்கு அனுப்பிவைத்தனர்**



நான்கு நாள் வயதுடைய குழந்தை பஸ்சிலிருந்து இறக்கப்படும் காட்சி



மகளிர் இல்லப்பிள்ளைகள் ஆறுதல் செய்யும் காட்சி



துர்க்காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகள் சிறுவர்களுக்கு ஆறுதல் செய்யும் காட்சி



அவசர சிகிச்சை செய்யும் தெல்லிப்பழை வைத்தியசாலை



மண்டபத்தில் உணவு பரிமாறும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் அச்சகம்,நல்லூர்.